


NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

■ 2016 மார்ச் 24, வியாழன்
■ ஹிஜ்ரி 1437 ஜ.ஆகிர் 14
■ மணி 02 ■ ஒளி 048
விலை: 15/-




#156, Hospital Road, Kalubowila, Dehiwala | Tel: 0117393880 | Fax: 0117393883 | Email: editornavamani@gmail.com | Facebook: www.facebook.com/NavamaniOfficial | Twitter: twitter.com/NavamaniLK



# 2018, 2019களில் மீண்டும் மின்தடை

## பாராளுமன்றத்தில் பிரதமர் அறிவிப்பு

அ.அருண் பிரசாந்த்

எதிர்வரும் 2018, 2019ஆம் ஆண்டுகளில் நாட்டில் மின்தட்டுப்பாடு ஏற்படும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மேலும், நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மின்தடை குறித்து அடுத்த பாராளுமன்ற அமர்வில் ஒருநாள் விவாதம் இடம்பெறும் எனவும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் அவர் நேற்று சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மின்தடை குறித்து மக்கள் பல கேள்விகளை எழுப்புகின்றனர். இதற்கிணங்க அடுத்த அமர்வில் ஒருநாள் விவாதம் ஒன்று நடைபெறவுள்ளது. அத்தோடு, மின்தடை குறித்து குறுகிய மற்றும் நீண்டகால தீர்வொன்றையும் முன்வைத்துள்ளோம்.

அதேநேரம், இந்த மின்தடையால் பொருளாதாரத்துக்குபாதிப்புஏற்பட்டது என்பதையும் கூறிக்கொள்ளவேண்டும்.

அத்தோடு, 2018, 2019ஆம் ஆண்டுகளில் நாட்டில் மின்தடை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, நாட்டில் மின்

11 ஆம் பக்கம்

## அகவை 67இல் பிரதமர் ரணில்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்று 67 வயதாகும்.

1949 மார்ச் 24ஆம் திகதி பிறந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மூன்றாவது முறையாக இலங்கையின் பிரதமர் பதவியை ஏற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் தனது பிறந்தநாளை எளிமையான முறையில் இன்று கொண்டாடுகின்றார்.





பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் 76ஆவது தேசியதினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் சகீல் ஹுசைன் தம்பதிகள் சிறுவர்களுடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடுவதை படத்தில் காணலாம்.

## மின்சக்தி அமைச்சர் பேசும்போது 'டோர்ச்' அடித்ததால் பரபரப்பு

அ.அருண் பிரசாந்த்


மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று சபையில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, எதிரணி உறுப்பினர் சிசிற ஜயகொடி டோச் லைட்டை அடித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

நேற்று பிற்பகல் பாராளுமன்றில், நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவிய தொடர் மின்வெட்டு குறித்த அறிக்கையை சமர்ப்பித்த அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அது குறித்த சில குறிப்புக்களை தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அதாவது, நாட்டில் தற்போது சுமார் 55 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 65 இலட்சத்துக்கும் அதிகமான

11 ஆம் பக்கம்





## இடைநிறுத்தம் கடிதம் கிடைத்தது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மஜ்லிஸ் சூராவின் தலைவர் மௌலவி ஏ.எம்.எம். கலீலுக்கு அக்கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதற்கான கடிதம் நேற்று கிடைக்கப் பெற்றதாக மௌலவி கலீல் தெரிவித்தார்.

11 ஆம் பக்கம்



## இலங்கை – இந்திய பாலம் விவகாரம்

## கம்மன்பில கேள்விகளுக்கு பிரதமர் நகைச்சுவை பதில்

அ.அருண் பிரசாந்த்

இலங்கை- இந்திய பாலம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் உதயகம்பன்பில கேட்ட கேள்விகளுக்கு பிரதமர் ரணில் விக்கரமசிங்க நகைச்சுவையாக பதிலளித்து குறித்த உறுப்பினரை கோபத்துக்கு உள்ளாக்கிய சம்பவமொன்று நேற்று சபையில் நடைபெற்றது.

பாராளுமன்றம் நேற்று மதியம் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பை

11 ஆம் பக்கம்



## அஞ்சல் பரிவர்த்தனை அதிகாரிகள் போதை மாத்திரை விநியோகம்

### அறிக்கைகோருகிறார் அமைச்சர் ஹலீம்



பிரித்தானியாவை மையமாக வைத்து பாரிய மட்டத்தில் சர்வதேச போதை மாத்திரைகளை விநியோகிப்பதில் மத்திய தபால் பரிவர்த்தனை நிலைய அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பது தொடர்பாகத் தனக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு தபால் சேவைகள், முஸ்லிம் சமய

11 ஆம் பக்கம்

## வசீம் மரண விசாரணை 2 மாதங்கள் அவகாசம்

### விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவு



பீ.எப்.எம். றிஷாட்

வசீம் தாஜுதீனின் மர்ம மரணம் சம்பந்தமான விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரபல ரக்பி விளையாட்டு வீரரான வசீம் தாஜுதீனை கொலை செய்த கொலையாளிகளை ஒரு மாதத்துக்குள் கைது செய்து

11 ஆம் பக்கம்

## தகவலறியும் சட்டமூலத்துக்கு 9 மாகாணசபைகள் அங்கீகாரம்

அ.அருண் பிரசாந்த்

தகவல் அறியும் சட்டமூலத்துக்கு 9 மாகாண சபைகளின் இருந்தும் அங்கிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று சபையில் சுட்டிக் காட்டினார்.

இதில், கிழக்கு, மேல், வடமேல், மத்திய, தென், ஊவா ஆகிய 6 மாகாணங்களும் இச்சட்டமூலத்தை திருத்தங்கள் இன்றி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், வடக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் திருத்தங்களுடன் அங்கீகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

11 ஆம் பக்கம்

## பெல்ஜியம் தாக்குதலின் எதிரொலி

## கட்டுநாயக்காவில் கடும் பாதுகாப்பு



கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் இரவு முதல் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு

11 ஆம் பக்கம்

## அ.இ.ம.கா. வழக்கு ஒத்திவைப்பு

அஸ்லம் எஸ். மௌலானா, சாய்ந்தமருது

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் பதவி தொடர்பில் கொழும்பு மாவட்ட

11 ஆம் பக்கம்

## ஜனாதிபதி ஆணைக்குழு முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

ஆதில் அலி சப்ரி

மக்கள் கருத்தறியும் ஜனாதிபதி ஆணைக்குழு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிரதிநிதிகள் மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்களை இன்று காலை 10 மணிக்கு விகும்பாயவில் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ.முபாரக் மதனியைத் தொடர்புகொண்டு கேட்ட போது,

11 ஆம் பக்கம்

## ஸாலிஹ் மத்ரஸா மாணவர்களின் 24வது வருட பட்டமளிப்பு விழா

(பழுலுல்லாஹ் பர்ஹான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான் குடி பிரதேசத்தில் இயங்கிவரும் ஸாலிஹ் அல்குர்ஆன் மத்ரஸா மாணவர்கள் அல்குர்ஆனை கற்று வெளியாகும் 24வது வருட மாபெரும் விழா 25-03-2016 வெள்ளிக்கிழமை காத்தான்குடி ஹிஸ் புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

ஸாலிஹ் அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் மௌலவி எம்.எஸ்.எம். அஸார் தலை மையில் இடம்பெறவுள்ள மேற்படி அல்குர் ஆனை கற்று வெளியாகும் 24வது வருட மாபெரும் விழாவில் பிரதம அதிதிகளாக மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், காத்தான் குடி காழி நீதிபதியும், ஜாமிஅதுல் பலாஹ் அறபுக் கல்லூரியின் பிரதி அதிபருமான மௌலவி எஸ்.எம்.அலியார் (பலாஹி), களுபோவில வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி எம்.எம். ஏ.அப்துர் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது 2015 டிசம்பர் இம்முறை 59 ஸாலிஹ் அல்குர்ஆன் மத்ரஸா மாணவர்கள் அல்குர்ஆனை கற்று வெளியேறவுள்ளதோடு மாணவர்களின் நிகழ்ச்சிகளும் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய வீடுகளைப் பெற நிபந்தனைகள் தடை

## மீள்குடியேற்ற மக்கள் விசனம்



மீள்குடியேற்ற அமைச்சினால் புதிய வீடுகள் பெறுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் அதன் நிபந்தனைகளால் மீள்குடியேறிய மக்களுக்கு வீடுகள் கிடைப்பது அரிதாகவே உள்ளதாக வவுனியா வடக்கில் மீள்குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், அண்மையில் மீள்குடியேற்ற அமைச்சினால் புதிய வீடுகளை பெறுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. இவை பத்திரிகை வாயிலாகவும் காட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டது.

எனினும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறியோரில் பலர் இன்றுவரை வீடுகள் இன்றி கொட்டகைகளிலும் தற்காலிக கொட்டகைகளிலும் வசித்துவருகின்றனர்.

ஏற்கனவே வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு வீடுகளை பெற்றவர்களின் தகுதிகளே மீளவும் வீட்டுத் திட்டத்திற்காக கோரப்பட்டுள்ளமையால் தாம் வீடுகளைப் பெறமுடியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து இன்றும் நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்கள், யுத்தம் காரணமாக அவயவங்களை இழந்தவர்கள், யுத்தம் காரணமாக உறவுகளை இழந்தவர்கள், யுத்தம் காரணமாக இந்தியா சென்று நாடு திரும்பியவர்கள் என வீடுகளை பெறுவதற்கு தகுதியானவர்களை விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனினும் வவுனியா பிரதேசத்தை பொறுத்தவரை இவ்வாறானவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் கணிசமான அளவில் வழங்கப்பட்டுள்ள நிலையில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய அனைவருக்கும் வீடுகளை வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முன்வரவேண்டும் எனவும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த வீட்டுத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் மத்திய மீள்குடியேற்ற அமைச்சினால் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு காசாளரோடு செயற்படும் தோப்பூர் மக்கள் வங்கி

(தோப்பூர் நிருபர் எம்.என்.எம்.புஹாரி)

தோப்பூர் மக்கள் வங்கியில் ஒரு காசாளர் மாத்திரமே கடமை புரிவதினால் வங்கிக்குச் செல்கின்ற பொது மக்கள் தமக்கான சேவையை பெறுவதற்கு மிக நீண்ட நேரம் வரிசையில் நிற்க வேண்டியுள்ளதாக தோப்பூர் 'மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தோப்பூர் மக்கள் வங்கி காலையில் திறக்கப்பட்டு மாலை 3.00 மணிக்கு மூடப்படும். அந்த வகையில் நேற்று புதன் கிழமை மாலை 2.45 மணியளவில் 15 நிமிடங்கள் மாத்திரம் வங்கி மூடப்படுவதற்கு முன்னர் தோப்பூர் மக்கள் வங்கியில் பெரும் நெருக்கடி காணப்பட்டது. இதனையடுத்து வங்கி முகாமையாளரை சூழ்ந்து கொண்ட பொதுமக்கள் வங்கி மூடுவதற்கு இன்னும் 15 நிமிடங்கள் மாத்திரமே இருக்கின்றது. விரைவாக காசோலைக்கு பணம் போட வேண்டும் இல்லா விட்டால் எங்களது காசோலை திரும்பி விடும் எனவே மேலதிகமாக ஒரு காசாளரை விரைவாக நியமிக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென முறையிட்டனர்.

இது சம்பந்தமாக தோப்பூர் மக்கள் கருத்து தெரிவிக்கையில், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் தோப்பூர் வங்கிக்கு வருகை தருகின்ற போதெல்லாம் பல தடவைகள் இவ் வங்கிக்கு இன்னுமொரு காசாளரை நியமித்து தருமாறு கேட்டிருக்கின்றோம். அவர் அதற்கு செவி சாய்ப்பதாக தெரியவில்லை. எனவே 'மக்கள் மனம் அறியும் வங்கி மக்கள் வங்கி' என்கின்றார்கள் அதற்கேற்ப அவ்வங்கியின் செயற்பாடுகள் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## திருட்டு மின்சாம் பெற்றவர் விளக்கமறியலில்

(எப்.முபாரக்)

திருகோணமலை சீனக்குடா பிரதேசத்தில் திருட்டு மின்சாரம் பெற்ற இருவரை விளக்க மறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதி மன்ற நீதிவான் ஹயான் மீ ஹகக்க நேற்று புதன்கிழமை (23) உத்தரவிட்டார். சீனக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 60மற்றும் 31வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குறித்த சந்தேக நபர்களுக்கெதிராக திருகோணமலைமின்பிராந்திய அலுவலகத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மின்சார சபை உத்தியோகத்தர்களும் சீனக்குடா பொலிஸாரும் திடீர் சோதனையை மேற்கொண்ட நிலையிலே செவ்வாய்கிழமை(22)மாலையில் கைது செய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சம்பூரில் பொது மக்களின் காணிகளை விடுவிக்கும் நிகழ்வு இவ்வாரத்தில்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பிரதேசத்தில் கடற்படை வசமிருந்த 177 ஏக்கர் காணிகளை விடுவித்து அதனைப் பொதுமக்களுக்கு கையளிக்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சம்பூரில் நடைபெற இருப்பதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான என்.ஏ.ஏ. புஷ்பகுமார தெரிவித்தார்.

தற்போது விடுவிக்கப்படும் நிலப்பகுதியில் மொத்தமாக 546 குடும்பங்கள் மீள்குடியேற வுள்ளன.

அத்துடன் சம்பூர் மகா வித்தியாலயம் அமைந்திருந்த காணியும் விடுவிக்கப்படும் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ளது.

காணிகளை மக்களுக்கு கையளிக்கும் வைபவத்தில் எதிர்க்கட்சித்தலைவர் ஆர். சம்பந்தன், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மற்றும் இந்து மத அலுவல்கள் விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ, கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் உட்பட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச உயரதிகாரிகளும் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

சம்பூர் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் நடைப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடம் மீளக்கையளிப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய நிறைவேற்றுக் குழு தீர்மானித்தற்கு அமைவாக இந்தக் காணி விடுவிப்பு இடம்பெறுகின்றது.

அரசாங்கப் படையினருக்கும் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக சம்பூர் பகுதியைச் சேர்ந்த சுமார் 2000 குடும்பங்கள் தமது வாழ்விடங்களை விட்டு அப்போது வெளியேற நேரிட்டது.

வெறிச்சோடிக் கிடந்த அந்த பிரதேச மக்களின் குடியிருப்பு காணிகளும் வயல் நிலங்களும் அரச முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், கடற்படை உயர் பாதுகாப்பு பிரதேசம் மற்றும் இந்திய அனல் மின் உற்பத்தி நிலையம் என மஹிந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் அடையாள மிடப்பட்டு விஷேட வர்த்தமானி பிரகடனம் மூலம் சுவீகரிக்கப்பட்டிருந்தது.



இதேவேளை கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்று தனது சொந்த ஊரில் பெரு வரவேற்பளிக்கப்பட்ட முதலமைச்சர் நஸீர் அஹமட் சம்பூர் மக்களின் துயரம் நிறைந்த அகதி வாழ்வைப் பற்றியும் அதனை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது பற்றியும் அப்போது தனது கரிசனையை வெளியிட்டிருந்தார்.

தனது ஆட்சிக் காலத்தில் சம்பூர் மக்கள் தமது பழைய இடங்களில் போய் குடியமர்ந்து அந்த மண்வாசனையில் கால் நீட்டித் தூங்க வேண்டும். அவர்கள் தமது சொந்த இடங்களிலிருந்து அகதிகளாகத் துரத்திப்பட்டிருக்கின்ற துயர நிலைமையை தொடர்ந்தும் அனுமதிக்கவே முடியாது என்றும் அவர் ஆதங்கப்பட்டிருந்தார்.

சம்பூர் பிரதேச மக்கள் தமது விரைவான மீள்குடியேற்றத்திற்காக இதற்கு முன்னர் பல தடவைகளில் உண்ணா விரதம், வீதி மறியல் போராட்டம், இரவுதீபங்களைஏற்றி பிரார்த்தனையில் ஈடுபடல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற நிலையில் குறித்த காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது.

முதல் தொகுதியில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு என அடையாளமிடப்பட்ட 818 ஏக்கர் விடுவிக்கப்பட்டது. இதன்படி முதற் கட்டமாக 207 குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் மீள் குடியேற்றப்பட்டார்கள்.

அந்த பகுதியிலுள்ள கடற்படை பயிற்சி முகாம் காரணமாக 69 சதவீதமான குடும்பங்களின் மீள்குடியேற்றம் இன்னமும் இடம்பெறவில்லை.

கடற்படை முகாம் 224 ஏக்கர் காணியில் அமைந்துள்ளது.

# மாகாணங்களுக்கு நிதி அதிகாரம் முழுமையாக வழங்கப்பட வேண்டும்!

## மத்திய மாகாண முதலமைச்சர்



மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாகாண சபைகளுக்கு கிடைக்க வேண்டிய நிதி மற்றும் நிதியை செலவிடும் முழு அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சகல முதலமைச்சர்களும் இன்று நடைபெறும் அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டத்திற்கு சென்று இந்த கோரிக்கையை விடுக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கண்டி ஹாரிஸ்பத்துவ, மஹதென்ன சமாதி செனசுன விகாரையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே முதலமைச்சர் இதனை கூறியுள்ளார்.

இம்முறை மாகாண சபைகளுக்கு நிதியை ஒதுக்கும் போதும் ஒரு பகுதி நிதி அதிகாரங்களை மத்திய அரசாங்கம் வைத்து கொண்டு நிதியை ஒதுக்கியுள்ளது.

இதனால், மாகாண சபை நடவடிக்கைகளில் தடையேற்படுகிறது. வரதராஜ பெருமாளை போல் நாங்கள் நாட்டில் ஒரு பகுதியை பிரித்து கோர மாட்டோம்.

மாகாண சபைகள் தேவையில்லை என்றால், அது பற்றி தனியாக பேச வேண்டும் எனவும் மத்திய மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# யோகேஸ்வரன் எம்.பியின் முஸ்லிம் விரோத உரை சம்பந்தனின் கவனத்திற்கு

## வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தகவல்

(பழுலுல்லாஹ் பர்ஹான்)



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அண்மையில் முஸ்லிம்கள் தொடர்பாகத் தெரிவித்த கருத்து குறித்து தமிழர் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் உட்பட தமிழர் தேசிய கூட்டமைப்பின் கவனத்துக்கு கொண்டு வருவதாக வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் ஐயூப் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ உறுப்பினரான அஸ்மின் ஐயூப் இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அண்மையில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தெட்டத்தெளிவான இனவாத கருத்துக்களாகும். இது மிகுந்த அதிர்ச்சியினையும் ஏமாற்றத்தினையும் எமக்களிக்கின்ற அதேவேளை இதனை வன்மையாக நாம் கண்டிக்கின்றோம்.

கல்குடா தொகுதியிலே தமிழ் மக்களுக்கு எதிராக இஸ்லாமியர் ஒருவருக்கு தமிழ் மக்கள் அதிகமாக வாக்களித்திருப்பதை வாக்கு எண்ணும் நிலையத்தில் தான் கண்டுகொண்டதாகவும் அந்த வாக்குகளை தமிழர்களின் சின்னமாகிய வீட்டுக்கு அளிக்காவிட்டாலும், ஏனைய கட்சிகளில் போட்டியிடுகின்ற தமிழர்களுக்கு அளித்திருக்கலாம் என்றும், ஆனால் தமிழர்கள் இஸ்லாமியரான ஒருவருக்கு வாக்களித்திருப்பது வேதனை தருகின்றது என்றும் யோகேஸ்வரன் தனதுரையில் குறிப்பிட்டிருக்கின்றார். மேற்படி கருத்துக்களை வீடியோ வடிவத்தில் செவியுறும் சந்தர்ப்பமும் எனக்குக் கிட்டியது.

அவரது கருத்துக்களில் முற்றுமுழுதான இனவாதம் இழையோடியிருப்பதை நான் செவியுற்று அதிர்ச்சியடைந்தேன். மட்டக்களப்பு மாவட்டத்திலே எவராவது ஒரு முஸ்லிம் அரசியல்வாதி சமூக விரோதமாக செயற்படுகிறார் என்றால் அதனை ஆதாரபூர்வமாக முன்வைத்து 'அவருக்கு தமிழ் மக்கள் மாத்திரமல்ல முஸ்லிம் மக்களும் வாக்களித்தமை தவறான செயல்' என்று பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருப்பின் அது அவரது இனவாதத்திற்கு எதிரான சமூகநீதிக்கான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கும். மாற்றமாக 'முஸ்லிம்கள் ஒருபோதும் தமிழர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்; தமிழ் மக்களும் முஸ்லிம்களுக்கு இஸ்லாமியர்களுக்கு வாக்களிக்கக் கூடாது' என்கின்ற அர்த்தத்தோடு அவரது கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. அத்தோடு மட்டக்களப்பு முஸ்லிம்கள் தமக்கு அவசியமான ஒரு நிர்வாக கட்டமைப்பாக மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தை பெற்றுக் கொண்டமையினையும் ஒரு இனவாதக் கண்ணோட்டத்தோடே யோகேஸ்வரன் அவர்கள் நோக்கியிருக்கிறார்கள் என்பதும் புலனாகிறது.

அவர் சார்ந்திருக்கும் கட்சியான தமிழரசுக் கட்சி தனது யாப்பில் முஸ்லிம்களுக்கான சுயநிர்ணய அலகு ஒன்று பற்றியே குறிப்பிட்டிருக்கும் நிலையில், அவர் முஸ்லிம்களுக்கான ஒரு கல்வி நிர்வாகத்தினைக் கூட ஏற்றுக் கொள்ளும் மனோநிலையில் இல்லை என்பது பெரும் ஆச்சர்யமாகவும், கவலையாகவும் இருக்கிறது.

இந்தக் கருத்துக்களை ஒரு சாதாரண ஒரு விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இவ்வாறான கருத்துக்கள் வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களை நிரந்தரமாக எதிரிகளாக வைத்திருப்பதற்கான அடிப்படைகளைத் தோற்றுவிக்குமே தவிர இரண்டு சமூகங்களுக்குமிடையில் நல்லிணக்கத்தையோ ஐக்கியத்தையோ ஏற்படுத்த ஒருபோதும் வழி சமைக்காது என்றார்.



கலாஜோதி காத்தான்குடி பௌஸ் மௌலவி பாணந்துறை, ஊர்மனை மஸ்ஜிதுல் முபாரக் ஜும்ஆப் பள்ளியில் தொடர்ச்சியாக கடமையாற்றி இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு அன்னார் தனது நூலகத்திலிருக்கும் ஆயிரக்கணக்கான நூல்களை பிராந்திய வாசிகசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்து வருகிறார். அதன் ஒரு கட்டமாக ஹேனமுல்ல அஹதியாவுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அன்பளிப்புச் செய்யும் வைபவத்தில் எடுக்கப்பட்ட படம். (படம் - ஏ.எல்.எம். அஸ்வர்)

## கடற்கரை பள்ளி வருடாந்த கொடியேற்றம்



(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

கல்முனைக் கடற்கரைப் பள்ளி வாசலின் 194ஆவது வருடாந்த கொடியேற்ற விழா நேற்று (22)மாலை முதல் நிறைவடைந்தது.

இஸ்லாமிய பெரியார் சங்கைக்குரிய சஹுல் ஹமீத் வலியுள்ளா அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் கல்முனைக் கடற்கரைப்பள்ளியில் இவ்விழா இடம் பெறுவது வழமையாகும்.

இதற்கமைய கடந்த 2016.03.10ஆம் திகதி மாலை கல்முனை முஹையதீன் ஜும்ஆ பெரிய பள்ளியிலிருந்து கொடி ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு கடற்கரைப்பள்ளி முன்பாக அமைந்திருக்கும் 7 தட்டு மணவரவிலும் 3 தட்டு மணவராவிலும் கொடிகள் ஏற்றப்பட்டு துஆப் பிரார்த்தனையுடன் ஆரம்பமானது.

கடந்த 12 நாட்களாக நடைபெற்ற இவ்விழா நேற்று மாலை கந்தூரி அன்னதானம் வழங்கப்பட்டு விஷேட துஆப்பிரார்த்தனையுடன் கொடி இறக்கப்பட்டது.

## க.பொ.த.சா.த பரீட்சையில் திறமை சித்தி பெற்ற மட்டு- புனித சிசிலியா பெண்கள் கல்லூரி மாணவிகள்

(பழுலுல்லாஹ் பர்ஹான்)

2015 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் படி மட்டக் களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரி மாணவிகள் திறமை சித்தி பெற்றுள்ளதாக கல்லூரி அருட்சகோதரி அருள் மரியா தெரிவித்தார்.

மேற்படி 2015 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் கருத்து தெரவிக்கையில்,

எமது கல்லூரியில்;2015 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின்படி 9 ஏ திறமை சித்திகளை 14 மாணவிகளும், 8 ஏ சித்திகளை 16 மாணவிகளும், 7ஏ சித்திகளை 13 மாணவிகளும் திறமை சித்தி பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## பதில் பொலிஸ் மா அதிபராக விக்கிரமசிங்க நியமனம்

பிரதிப் பொலிஸ்மா அதிபர் விக்கிரமசிங்க நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவர் ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவின் பிரதானியாகவும் செயற்பட்டு வருகின்றார்.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் எதிர்வரும் 12ஆம் திகதி தனது பதவியிலிருந்து ஓய்வு பெறப்போவதை முன்னிட்டு இருவார விடுமுறையில் சென்றுள்ளார்.

இதன் காரணமாகவே நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபராக எஸ்.எம். விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அத்துடன் ஏப்ரல் 12ஆம் திகதிக்குப் பின்னர் பெரும்பாலும் இவரே பொலிஸ் மா அதிபர் பதவிக்கும் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேநேரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 3 சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்களின் பெயர்களை அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு சிபார்சு செய்துள்ளார்.

## கம்பஹா மாவட்டத்தில் உப்பு விலை உயர்வு

(மினுவாங்கொடை நிருபர்)

நாட்டில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களில் உப்பின் விலையும் உயர்வடைந்துள்ளதாக பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை, மீரிகம, நீர்கொழும்பு திவுலப்பிட்டிய, நிட்டம்புவ, வத்தளை, உள்ளிட்ட பிரதேசங்களில் உப்பிற்கு மாத்திரம் தட்டுபாடு நிலவி வருகின்றது.

புத்தளம், ஹம்பாந்தோட்டை ஆகிய உப்பளங்களில் உப்பு உற்பத்தி அதிகளவில் தடைப்பட்டமையே இவ்வாறு தட்டுப்பாடு ஏற்படக்காரணமெனத் தெரிவித்த உற்பத்தியாளர்கள் இன்னும் ஓரிருவாரங்களில் இத்தட்டுபாடு நீங்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தனர்.

# குடிநீர் பிரச்சினை தீர்வுக்கு விரிவான திட்டங்கள் அமுல்

### சர்வதேச நீர் தின நிகழ்வில் அமைச்சர் ஹக்கீம்

எனது 22 வருட பாராளுமன்ற வாழ்க்கையில் நான் எதிர்நோக்கிய நீர் தொடர்பான பிரச்சினைகள் ஏராளமானவை. அவை அனைத்தையும் மலர்ந்துள்ள இந்த நல்லாட்சியில் எனக்கு வழங்கப்பட்டுள்ள நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மூலம் செவ்வனே நிறைவேற்ற வேண்டும் என்ற அவா என்னுள் ஆழமாக பதிந்துள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நீர் மற்றும் தொழில்வாய்ப்பு - 2016 என்ற தொனிப் பொருளில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர், பொறியியலாளர் கே.ஏ.அன்சார் தலைமையில் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

2019 ஆம் ஆண்டளவில் உலகம் மிகமோசமான வரட்சியை எதிர்நோக்க நேரிடும் என்று எதிர்வு கூறப்படுகின்றது. கடந்த வாரத்தில் நாம் சந்தித்த எரிசக்தி பிரச்சினையின் மூலமும் அதனை யூகித்துக் கொண்டோம். அதேபோன்று குடிநீர் தொடர்பில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கும் எதிர்வு கூற நாம் தயாராக வேண்டும்.

எனது 22 வருட பாராளுமன்ற வாழ்க்கையில் நான் எதிர்நோக்கிய நீர் தொடர்பான பிரச்சினைகள் ஏராளமானவை. அதனை எனக்கு வழங்கப்பட்டுள்ள நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மூலம் நிறைவேற்ற வேண்டும் என மிகுந்த ஆசையுடன் உள்ளேன்.

மிகுந்த சிரத்தை எடுத்து எமது நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள குழாய் நீர் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வேன்.

தற்போது நாட்டில் 45 சதவீதமானவர்களுக்கு சிரானகுழாய் நீர் விநியோகம் வழங்கப்படுகின்றது. 2020ஆம் ஆண்டளவில் 60 சதவீதமானவர்களுக்கு குழாய் நீர் விநியோகத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். மேலும், கிணற்றுநீர் பாவணை, மழைநீர் சுத்திகரிப்பு மற்றும் சேகரிப்பு



போன்ற திட்டங்கள் உரிய கவனம் செலுத்தி வருகின்றோம். இதனால் நாட்டில் சகல பிரதேசத்தில் வாழும் மக்களுக்குரிய நீரை மிகவிரைவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் என்.ம. ஹெட்டிஆராச்சி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி, ஜெய்க்கா பிரதிநிதி, யுனிசெப் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திருமதி உனாமெக் கோலி, வெளிநாட்டு தூதுவர்கள் அமைச்சின் அதிகாரிகள், மற்றும் சக ஊழியர்கள் உட்படபலரும் கலந்து கொண்டனர்.

### எட்காவுக்கு எதிராக

## கொழும்பில் இன்று பேரணி

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்கு இடையில் செய்து கொள்ளவிருக்கும் எட்கா உடன்படிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று கொழும்பில் மாபெரும் பேரணியொன்று இடம்பெறவுள்ளது.

70 தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்புத் பேரணியை கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் ஏற்பாடு செய்துள்ளனர்.

மேலும், இந்த எதிர்ப்புப் பேரணியில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், தொழிநுட்பவியலாளர்கள், கலைஞர்கள், கணக்காளர்கள், மனிதவள ஆர்வலர்கள் உள்ளிட்ட 70 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாக ஒன்றிணைந்த தொழிநுட்ப வல்லுனர்களின் அமைப்பு தெரிவித்தது.

அத்துடன், இந்தியாவுடன் செய்து கொள்ளவிருக்கும் குறித்த எட்கா ஒப்பந்தத்தினால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என பலமுறை அரசாங்கத்திடம் வலியுறுத்தியும் அரசாங்கம் அவற்றை கவனத்திற் கொள்ளாமல் குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் அதிக அக்கறை காட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த எதிர்ப்பு பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியது.

## அமெரிக்க கடற்படை இலவச இசைநிகழ்ச்சி

இலங்கை வந்துள்ள அமெரிக்க கடற்படையின் இசைக்குழு நடத்தும் இசை நிகழ்ச்சிகள் எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

26 ஆம் திகதி பிற்பகல் 6 மணிமுதல் 8 மணிவரை திறந்த வெளி அரங்கிலும், 27 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் ஒரு மணிவரை கொழும்பு மெஜெஸ்டிக் சிட்டியிலும் 6 மணிமுதல் 7 மணி வரை புறக்கோட்டை டச் வைத்தியசாலையிலும் நடைபெறும்.

இலவசமாக நடைபெறும் இந்த இசை நிகழ்ச்சிக்கு இலங்கை கடற்படை மற்றும் இராணுவ இசைக்குழுக்களும் இணைந்து கொள்ளும்.

## தம்புள்ளை பொருளாதார நிலையத்துக்கருகில் மதுபானசாலைகள் மூட ஆலோசனை

### ரஞ்சித் அலுவிஹார

(ஏ.ஸீ.ஏ.முனாஸ் வஹக்கோட்டை)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு மரக்கறி கொண்டு வரும் அதிகமான விவசாயிகள் மரக்கறிகளை விற்று பணத்தை கொண்டு செல்ல முடியாத நிலையொன்று தோன்றியுள்ளதாக மாத்தளை மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் ரஞ்சித் அலுவிஹார தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலையத்துக்கருகிலுள்ள மதுபானசாலைகள் இரவு முழுவதும் திறந்துள்ளது. இதனால் இதில் குடித்துவிட்டு வரும் வேளை, வழிப்பறி மற்றும் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதால் விவசாயிகள் ஏமாறும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இதனை கவனத்திற் கொண்டே பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகிலுள்ள 3 மதுபானசாலைகளை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு ஆலோசனை கொண்டுவரவும், இதன் மூலம் விவசாயிகளை காப்பாற்ற முடியும் என்றும், அனைவரினது உதவிகளை நாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கடந்த வருடம் 112 கர்ப்பிணிகள் உயிரிழப்பு

கடந்த வருடத்தில் மட்டும் 112 கர்ப்பிணிகள் உயிரிழந்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதில் நூற்றுக்கு 81 வீதமானவர்கள் கல்வியறிவு அற்றவர்கள் என்றும், அத்துடன் 75 வீதமானோர் கிராமங்கள் மற்றும் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பெண்கள் என்று சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டது.

மேலும் உயிரிழந்துள்ள பெண்களில் பலர் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை இந்த 112 உயிரிழப்புக்களில் சிகிச்சைகள் தாமதமாகி வைத்தியசாலைக்குள் இடம்பெற்ற மரணங்களின் எண்ணிக்கை 38 என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்ததோடு, கடந்த வருடம் பிறந்த 118 குழந்தைகள் தாயை இழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அத்துடன் கடந்த வருடம் இடம்பெற்ற கர்ப்பிணித் தாய்மார்களின் உயிரிழப்புக்களுக்கு காரணம் கருக்கலைப்பு, இதயநோய் உள்ளிட்ட நோய்களே காரணம் எனவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியது.

## எருக்கலம்பிட்டிய மத்திய கல்லூரி ஒன்றுகூடல் ஏப்ரல் 23 கொழும்பில்

எருக்கலம்பிடிய முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களது ஒன்றுகூடல் ஒன்றை எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எருக்கலம்பிடிய முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் செயற்கூட்டம் 2016.02.22 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.செல்வரஞ்சன் தலைமையில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் உத்தியோக நிமிர்த்தமும், தொழில் சார்ந்தும் வாழ்ந்து வரும் ஆயிரக்கணக்கான இப்பாடசாலையில் கற்ற பழைய மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கல்லூரியை வளம் பெறச் செய்யும் நோக்கிலே மாணவர்களின் ஒன்றுகூடலை நடாத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வொன்று கூடலில் சகல பழைய மாணவர்களும் பங்குபெறச் சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது. கல்லூரியின் வரலாறு, அது எதிர்நோக்கும் சவால்கள், அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஞாபகார்த்த மலரொன்றும் அத்தினத்தில் வெளியிட இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்களும் இக்கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் பங்குபற்றும் வகையில் கல்வியின் ஊடாக மீண்டும் எழுவோம் என்ற தலைப்பிலான பேச்சுப் போட்டியொன்று நடாத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குப் பணப்பரிசில்களும் வழங்குவதென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அதிபர் செல்வரஞ்சன் தெரிவித்தார்.


(தகவல் - எம்.கே.எச்.முஹம்மத்)

## புகைப்படக்கண்காட்சி யாழில் பொலிஸ் திணைக்களம் ஏற்பாடு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ''பொலிஸ் நெத'' எனும் புகைப்படக் கண்கட்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியானது யாழ்ப்பாணம் பிரிவிற்குட்பட்ட யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் 6 மணிவரை மக்களின் பார்வைக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த கண்காட்சியில் 6 தசாப்தங்கள் பழமை வாய்ந்த மற்றும் இலங்கை சமூகத்துடன் இணைந்திருக்கும் அரியவகை புகைப்படங்களை காணக்கூடியதாக அமையும். கடந்த காலங்களில் மக்கள் மத்தியில் அதிகமாகப் பேசப்பட்ட புகைப்படங்கள் மட்டுமன்றி வேலுப்பிள்ளை பிரபாகரனால் நடத்தப்பட்ட மத்திய வங்கி குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்ட புகைப்படங்களும், வேலுப்பிள்ளைப் பிரபாகரனின் கைவிரல் அடையாளங்களைக் காணக்கூடியதாக புகைப்படங்களும் மக்களுக்கு அரிதாக பார்க்ககூடியதாக ஏற்பாடு செய்துள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.

## தூக்குத் தண்டனைக்கு ஆயிரம் பேர் காத்திருப்பு



பல்வேறு குற்றங்களுக்காக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிசான் தனசிங்க தெரிவித்தார்.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக சிறைச்சாலைகள் இடப்பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டோரில் 400 க்கு மேற்பட்டோர் தீர்ப்பினை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்துள்ளனர்.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆயிரம் பேரில் 30 பேர் பெண்களாவர்.

## பரீட்சையில் தோல்வி மாணவி தற்கொலை

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் சித்தியடைய முடியாமல் போனதால் பாடசாலை மாணவியொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குறித்த மாணவி தனது வீட்டிலே தூக்கில் தொங்கியே தற்கொலை செய்தருள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

புசல்லாவை, நாயாபான வத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற முடியாமையால், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட மாணவி தற்கொலை செய்து கொண்டிருப்பது பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியது.

சடலம் வைத்தியசாலையின் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைகள் நேற்று இடம்பெற்றது.



NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
24TH MARCH 2016 - THURSDAY

# மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குங்கள்

மாகாணசபைகளுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

ஹிக்கடுவையில் நடைபெற்ற 32ஆவது மாகாண முதலமைச்சர்களது மாநாட்டில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை இலங்கையின் அரசியல் முறையுடன் ஒன்றோடு ஒன்றிணைந்த முறையாக மாறி மூன்று தசாப்தங்கள் கழிந்துள்ளன.

1987ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இப்போதாகும்போது மாகாணசபைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. 32ஆவது முதலமைச்சர்களது மாநாட்டில் மாகாணசபைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக மாகாணசபைகளுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உலகின் முன்னேற்றம் கண்ட பல நாடுகளில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டு மாகாணசபைகளுக்கு ஒத்த சபைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. அயல் நாடுகளான இந்தியா – பாகிஸ்தான் மட்டுமன்றி அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே போன்ற நாடுகளில் இந்தமுறை சிறப்பாக இயங்கிவருகின்றன. இந்த நாடுகளில் இரு பிரதான நோக்கங்களை அடிப்படையாக வைத்தே இந்த முறை ஏற்படுத்தப்பட்டது ஒன்று. அதிகாரத்தை பரவலாக்குவது மற்றது. அபிவிருத்தியை துரிதப்படுத்துவது இந்த இரு விடயங்களிலும் இந்த நாடுகள் வெற்றி பெற்றுள்ளன.

எமது நாட்டைப் பொருத்தவரை மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் இன்றும் இழுபறிநிலையே காணப்படுகின்றது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண முதலமைச்சர்களும் அமைச்சர்களும் தமக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையை நிறைவேற்ற முடியாத நிலைக்கு மாகாணசபைகள் தள்ளப்பட்டுள்ளன. அநேக விடயங்களில் மத்திய அரசின் அமைச்சுக்களின் கைகள் ஓங்கியிருப்பதினால் மாகாணசபைகள் பரிதாபகர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

1987இல் அவசர அவசரமாகவே இந்த மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஓர் அங்கமாகவே இது உருவாக்கப்பட்டது. இன்றாகும்போது மூன்று தசாப்தங்களை கடந்துள்ள நிலையில் மாகாணசபைகள் பல்வேறு மாற்றங்களை வேண்டி நிற்கின்றன.

இந்தியாவில் பிராந்திய அரசுகளுக்கு அப்பிராந்தியத்தின் அபிவிருத்திப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு கொள்கைகளை வகுப்பதுடன் நாட்டின் பொதுச் சட்டங்களைத் தயாரிக்கின்றது. ஆனால், எமது மாகாணசபைகளின் முறையில் அவ்வாறில்லை. மாகாணங்களில் அபிவிருத்தியில் மத்திய அரசின் அமைச்சே கூடுதலாக ஈடுபடுகின்றது. உதாரணமாக வீதி அபிவிருத்தியை எடுத்துக்கொண்டால் பிரதான வீதிகளின் அபிவிருத்திக்குப் பொறுப்பாக மத்திய அரசின் அமைச்சு உள்ளது. மாகாணத்தின் சிறு வீதிகளின் அபிவிருத்திக்கு மாகாணசபைகள் பொறுப்பாக உள்ளன. இவ்வாறு எத்தனையோ உதாரணங்களை சுட்டிக் காட்டலாம்.

இவ்வாறான சிக்கல்களுக்கு மத்தியிலேயே மாகாணசபைகள் இயங்கிவருகின்றன. இதுதவிர மாகாணசபைகளது பணிகளை முன்னெடுப்பதில் சில மாகாணங்களில் ஆளுநர்களது தலையீடும் பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகணசபைகளில் இந்த நிலைமை மேலோங்கி இருப்பதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணசபைகளில் ஓர் இடமாற்றத்தைக்கூட அமுல் நடத்த முடியாத நிலைக்கு முதலமைச்சர்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பின்னணிகளில் இயங்கும் மாகாணசபைகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி அளித்துள்ள வாக்குறுதி வரவேற்புக்குரியது. அரசியலமைப்புத் திட்டம் மாற்றப்படும்வரை காத்திருக்காது வழங்கக்கூடிய அதிகாரங்களை வழங்கி மாகாணசபைகளை சிறப்பாப இயங்க அனுமதிக்க வேண்டும்.

மாகாணசபைகளுக்கு 13ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டப்படி கிடைக்கவேண்டிய அதிகாரங்களை வழங்கியும் தேவையான நிதியை ஒதுக்கியும் மாகாணசபைகளது சீரான இயக்கத்துக்கு ஜனாதிபதி தலையிட்டு தேவையான வழிகாட்டல்களை வழங்குவது இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை முக்கியமானது. இன்றேல் மாகாணசபைகள் நாட்டுக்கு வெள்ளையானைகளாக இருப்பது தவிர்க்க முடியாது.



# முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்படாமை கவலையளிக்கிறது

## இந்திய முன்னாள் எம்.பி எம்.அப்துல் ரஹ்மான் நவமணிக்கு சிறப்புப் பேட்டி

**திருச்சி எம்.கே சாஹுல் ஹமீத்**

வடக்கில் விடுதலைப்புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் 25 வருடங்களாகியும் இன்னும் மீள் குடியேற்றப்படாமல் இருப்பது கவலை தருகிறது என முன்னாள் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய யூனியன் லீக் தமிழ் மாநில முதன்மை துணைத் தலைவருமான எம். அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 19 ஆவது தேசிய வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிலிருந்து பிரதிநிதியாக வருகை தந்த முன்னாள் எம்.பி அப்துல் ரகுமான் நவமணிக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் அழைப்பின் பேரில் அதன் தேசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நானும் எங்கள் கட்சியின் தமிழ் மாநில கொள்கை பரப்புச் செயலாளரும் மணிச்சுடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான காயல் மஹ்பூப், மணிச் சுடர் பத்திரிகை ஊடகவியலாளர் திருச்சி எம்.கே சாஹுல் ஹமீத் ஆகியோர் வருகை தந்து மாநாட்டில் கலந்து கொண்டோம்.

**கேள்வி: உங்கள் இலங்கை விஜயம் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

**பதில்:** இந்த நாட்டுக்கு 30 வருடங்களுக்குப் பிறகு வருகை தந்திருக்கிறேன். அன்றும் இன்றும் பார்க்கும் போது நாட்டில் பெரிய மாற்றங்களைக் காணுகிறேன். உண்மையிலேயே இலங்கைத் தீவு பார்வையில் முன்னேற்றம் கண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்குச் சென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அந்த மாநாடு தேசிய ஒற்றுமையைப் பிரதி பலிக்கும் மாநாடாக இருந்தது. நாட்டின் ஜனாதிபாதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் சகல அரசியல் கட்சித் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்கள். 5 வருடங்களுக்கு முன் இந்த நாட்டில் யுத்தம் நடந்ததாக நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு எல்லாம் இனத்தவர்களும் ஒரே மேடையில் ஒன்றாக இருப்பதைக் காணும் போது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி தோன்றுகிறது.

**கேள்வி: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டைப் பற்றி என்ன சொல்கின்றீர்கள்?**

**பதில்:** இலங்கை முஸ்லிம்கள் இடையே பெரும்பாலான ஆதரவு இக்கட்சிக்கு இருப்பதைனை இம் மாநாடு உணர்த்துவதாக இருந்தது.

குறிப்பாக இம்மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வெளிப்படையான பேச்சு இலங்கையின் அனைத்து தரப்பு மக்களுக்கும் உற்சாகத்தைத் தருவதாகவும், வன்முறையை எதிர்க்கும் மக்களுக்கு பெரிய நம்பிக்கையையும் ஊட்டுவதாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இம்மாநாட்டில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தனி நாடு கோரிக்கையை கைவிட்டோம் என்ற பேச்சு மிகவும் சந்தோஷத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அனைத்து சிறுபான்மையினரும் எதிர்நோக்கும் அதிகாரப் பங்கீட்டு தேவை என அழுத்தம் திருத்தமாக முழங்கியது தமிழகத்தில் எதிரொலிக்க வேண்டியதொன்று.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என நாம் அனைவரும் ஒன்றிணைந்தே இந்த நல்லரசை அமைத்துள்ளோம். அது நீடித்து நிலைக்கும். அதனை எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டது அவர் முஸ்லிம்களை ஒருங்கிணைக்கும் தார்மீக தலைவர் என்பதை பறைசாற்றுகிறது.

இந்த மாநாட்டின் மூலம் ஓர் நல்ல நோக்கம் நிறைவேறியுள்ளது. அப்படி ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு வாழ்த்தியதில் எங்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் முஹைதீன் வாழ்த்துக்களைத் தெரிவித்ததில் எங்களுக்கு மகிழ்ச்சி.

அண்மையில் எங்கள் கட்சியின் சார்பில் தமிழக விழுப்புரத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மஹல்லா ஜமாஅத் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய ரவூப் ஹக்கீம் பெரும்பான்மையினருக்கு மத்தியில் சிறுபான்மை முஸ்லிம்கள் கண்ணியமாக வாழ்வது எப்படி என்பதை விளக்கினார். அதை இலங்கையில் அவ் செயல்படுத்தி காட்டியிருக்கிறார் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.


**கேள்வி: மீள் குடியேற்றம் தொடர்பாக நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

**பதில்:** யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை அரசாங்கம் மீள்குடியேற்றி இருப்பதை இட்டு நாம் சந்தோஷமடைகிறோம். ஆனால் 25 வருடங்களுக்கு முன்பு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களை மீள்குடியேற்றாமல் இருப்பது வருத்தத்தையளிக்கிறது. இது குறித்து புதிய அரசு முன்னுரிமையிக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இது குறித்து எங்கள் கட்சியின் தேசியத் தலைவர்.அஹமது மாநிலத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் முஹைதீன் ஆகியோர் கவனத்துக்குக் கொண்டு சென்று எங்கள் தலைவர்கள் ஊடாக இந்தியாவிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் மூலமாக இது குறித்துப் பேசுவோம்.

தமிழக முஸ்லிமாகிய எங்கள் எதிர்பார்ப்பெல்லாம் போரால் புலம்பெயர்ந்த தமிழர்கள் விரைவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு அவர்கள் நிம்மதியுடன் வாழ்வது போன்று வட புலத்திலிருந்து விரட்டப்பட்டு 25 ஆண்டு காலமாக சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாமல் இருக்கும் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதே அந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் விரைவில் நல்ல ஒரு தீர்வைக் காணும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

**கேள்வி: இலங்கை, இந்திய அரசு உறவு எப்படி இருக்கின்றது?**

**பதில்:** தற்போதைய இலங்கை அரசுடன் இந்தியாவுடன் நல்ல உறவை சுமுகமாகப் பேணி வருகின்றது. இலங்கையின் முன்னேற்றத்தில் இந்தியாவும் மிகச் சிறந்த அக்கறை காட்டுகிறது. இரு நாட்டு உறவும் வலுப் பெறுவதே இந்தப் பிராந்தியத்தின் ஸ்தாபகத் தன்மைக்கு நன்மை பயக்கும். எனவே இலங்கை இந்திய உறவுகளால் இரு நாடுகளும் பயனடையும்.



# அகவை 67இல் பிரதமர் ரணில்

**ஆதில் அலி சப்ரி**

ரணில் ஸ்ரீயான் விக்ரமசிங்க எஸ்மன்ட் மற்றும் நாலினி விக்ரமசிங்க தம்பதிகளின் 2ஆவது புதல்வராக 1949 மார்ச் 24 பிறந்தார். இவாது தந்தை எஸ்மன்ட் விக்ரமசிங்க ஒரு பெரும் ஊடகவியலாளர் ஆவார். லேக் ஹவுஸ் பத்திரிகை தாபனத்தின் தலைவராக செயற்பட்டு வந்தவர். லேக் ஹவுஸ் ஸ்தாபகர் டீ.ஆர் விஜேவர்தன ரணில் விக்ரமசிங்கவின் பாட்டனாராவார். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் மருமகனும் ஆவார். கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான இவர், 1972ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் கல்விபயின்று பின்னர் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணமெடுத்தார்.

இவர் 1977இல் கம்பஹா மாவட்ட பியகம தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சி பிரதான அமைப்பாளராக கட்சியில் இணைந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். ஆரம்பத்தில் பிரதி வெளிவிவகார அமைச்சராகவும், பின்னர் இளைஞர் விவகாரம், கைத்தொழில்துறை, கல்வி அமைச்சராகவும் தெரிவானார். 1994 ஜனாதிபதித்
தேர்தல் காலத்தில் காமினி திஸாநாயக்கவின் கொலையைத் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். ரணில் விக்ரமசிங்க கல்வியமைச்சராக இருக்குபோது திறமையடிப்படையில் நியமனங்களை மேற்கொள்ளும் முறையை ஆரம்பித்து வைத்தார்.

1993 -1994 காலப்பகுதியில் ரனசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக இருக்கும் போதும், 2001 -2004 காலப் பகுதியில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருக்கும் போதும் பிரதமராக செயற்பட்டார். 1994-2001 காலப்பகுதியில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமராக இருக்கும் போது எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டார். 1999 ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவுசெய்யப்பட்டு போட்டியிட்ட போதும், எல்.ரீ.ரீ.ஈயினர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்கு வைத்து நடத்திய தற்கொலைத் தாக்குதலால் அனுதாப வாக்குகளால் சந்திரிக்கா வெற்றிபெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார்.

2002 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருக்கும் போது அமெரிக்க மற்றும் நோர்வே அரசின் உதவியுடன் எல்.ரீ.ரீ.ஈயினருடன் சமாதான போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டார். இதனால் நாடு பொருளாதார மற்றும் சுற்றுலாத் துறைகளில் கணிசமான வளர்ச்சி கண்டது. 2002, 2003 காலப்பகுதியில் 6 சுற்றுக்களைக் கொண்ட இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றது. பாங்கொக், ஒஸ்லோ, பேர்லின் மற்றும் டோக்கியோவில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளில், கலாநிதி ஜி.எல் பீரிஸ் மற்றும் அமைச்சர்களான மிலிந்த மொரகொட, றவூப் ஹக்கீம் ஆகியோர் இலங்கைப் பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கினர். பேச்சுவார்த்தைத் சுற்றுக்களில் விடுதலைப் புலிகள் சார்பாக அன்டன் பாலசிங்கம், அரசியல் துறைத் தலைவர் தமிழ்ச்செல்வன் மற்றும் இராணுவத் தலைவன் கருணா அம்மன் ஆகியோர் கலந்துகொண்டனர். இவ்வாறு இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் சுமுகமான தீர்வொன்றை எட்டுவதில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பங்களிப்பு அளப்பரியது.

2004ஆம் ஆண்டு சந்திரிக்கா குமாரதுங்க அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டணியமைத்து 2004 பெப்ரவரி 7ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராகவே செயற்பட்டு வந்தார்.

மேலும் 2005 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் இரு தடவையுமே ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி தோல்வியைத் தழுவியது.

2015ஆம் ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து, நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக ரணில் விக்ரமசிங்க 100நாள் அரசாங்கத்தின் பிரதமராக பதவியேற்றார்.

100 நாள் அரசாங்க வேலைத்திட்டங்களின் நிறைவைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய தேசிய கட்சி 106 ஆசனங்களை வென்று நான்காவது தடவையாகவும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்றார். இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்க 500,556 வாக்குகளைப் பெற்றார். ரணில் விக்ரமசிங்க 2001ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருக்கும் போது ஆரம்பித்து கைவிடப்பட்டிருந்த மெகா பொலிஸ் திட்டத்தை மீண்டும் ஆரம்பித்து இலங்கையை கல்வி, அரசியல் பொருளாதார ரீதியாக 2030ஆம் ஆண்டளவில் தன்னிறைவடையச் செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகிறார். அரசியலில் மிஸ்டர் கிளீன் என அழைக்கப்படுகிறார்.

# பெல்ஜியம் தாக்குதல்

# 79 திக்.. திக்.. நிமிடங்கள்

**கே.சுபானி**

அந்த 79 நிமிட பயங்கரவாத தாக்குதல் சீராக இயங்கிக்கொண்டிருந்த பெல்ஜியத்தின் அமைதியை சீர்குலைத்துவிட்டது.

உள்ளூர் நேரப்படி காலை 8 மணியளவில் இரட்டை குண்டுதாக்குதல், பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் அமைந்துள்ள சவென்டம் சர்வதேச விமான நிலையம் அதிர்ந்தது.

இதன் பின்னர் காலை 9.19 மணிக்கு பிரசல்ஸிலுள்ள மெட்ரோ ரயில் நிலையம் நிலைகுலைந்தது. காலை 11 மணியளவில் பெல்ஜியம் தமது நாட்டில் நடந்தது பயங்கரவாத தாக்குதலே என உறுதிபடுத்தியது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸிலுள்ள விமான நிலையம், மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ளிட்ட இடங்களில் இடம்பெற்ற 3 வெடிகுண்டு தாக்குதல்களில் 34 பேர் பரிதாபகரமாக சம்பவ இடத்திலேயே உடல்சிதறி உயிரிழந்ததுடன் 200இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இக் கொடூரத் தாக்குதலுக்கு அப்போது எந்த பயங்கரவாத இயக்கமும் பொறுப்பேற்காத நிலையில் பின்னர் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்று அதிரவைத்தது.

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்செல்ஸிலுள்ளது சவென்டம் விமான நிலையம். உலகின் பல நாடுகளுக்கு இங்கிருந்து விமானங்கள் இயக்கப்படுகின்றன. இதனால் எந்நேரமும் பயணிகள் கூட்டம் நிரம்பி வழியும் இவ் விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் சக்திவாய்ந்த இருகுண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. விமான நிலையத்தின் புறப்பாடு பகுதியில் கண்ணாடி ஜன்னல்கள், மேற்கூரைகள் உடைந்து சிதறின. விமான நிலைய வளாகம் புகை மண்டலமானது. குண்டு வெடிப்பு சத்தம் கேட்டதும் விமான நிலையத்திலிருந்த பயணிகள் பீதியில் அவசர வழி கதவை நோக்கி ஓடினர். இந்த இரண்டு குண்டு வெடிப்பிலும் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். 120 பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து விமான நிலையம் மூடப்பட்டது. புறப்பட வேண்டிய விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. பிரசல்ஸ் நகருக்கு வந்து கொண்டிருந்த விமானங்கள் வேறு இடங்களுக்கு திருப்பி விடப்பட்டன.

விமான நிலையம் சார்பில் டுவிட்டரில் வெளியிட்ட தகவலில்,

''விமான நிலையத்தில் இரண்டு இடங்களில் குண்டுவெடிப்பு நடந்துள்ளது. யாரும் விமான நிலையத்துக்கு வரவேண்டாம். அடுத்த அறிவிப்பு வெளியாகும்வரை விமான நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்த வைக்கப்பட்டுள்ளது'' எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, விமான நிலைய வளாகத்தில் பாதுகாப்பு படையினரும், மீட்புக்குழுவினரும் உடனடியாக மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் பிரசல்ஸ் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மால்பீக் மெட்ரோ ரயில் நிலையத்தில் பயங்கர சத்தத்துடன் மூன்றாவது குண்டு உள்ளூர் நேரப்படி காலை 9.19மணியளவில் வெடித்தது. இதில் 20 பேர் பலியாயினர், 90 பேர் படுகாயமடைந்தனர்.

பரபரப்பாக வேலைக்கு சென்று கொண்டிருந்த மக்கள் குண்டு சத்தம் கேட்டதும் பீதியில் ரயில் நிலையத்தை விட்டு வெளியேறினர். குண்டுவெடிப்பு நிகழ்ந்த இந்த மால்பீக் நகரிலேயே ஐரோப்பிய யூனியனின் முக்கிய அலுவலகங்கள் அமைந்துள்ளன. பிரஸ்செல்ஸ் நகரில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து நகர போக்குவரத்து சேவைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

விமானம் மற்றும் ரயில் நிலையங்கள் பூட்டப்பட்டன. பாதுகாப்பு காரணங்களுக்காக பிரசல்ஸ் நகருக்கு செல்லும் அனைத்து விதமான போக்குவரத்துகளும் இடைநிறுத்தப்பட்டு, ஏராளமான பாதுகாப்புபடையினர் குவிக்கப்பட்டனர். அதுமட்டுமல்லாது நாடுமுழுவதும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

## நேரில் பார்த்தவர்களின் கருத்துக்கள்

விமான நிலைய குண்டுவெடிப்பை நேரில் பார்த்த ஒருவர் கூறுகையில்,

''சம்பவ இடத்தில் பலர், கை, கால்கள் துண்டிக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்; அப்பகுதியில் பெரியளவில் கரும்புகை எழுந்தது. அருகில் இருந்தவர்கள், பீதியில் அலறியடித்தபடி ஓட்டம் பிடித்தனர்'' என்றார்.

விமான நிலைய அதிகாரி ஒருவர் கூறுகையில், ''விமான நிலையத்தில் ஒருவன், அரபு மொழியில் சில வார்த்தைகளை சத்தமாக கூறினான்; சில நொடிகளில் அங்கே பயங்கர சத்தத்துடன் குண்டுகள் வெடித்து சிதறின'' என்றார்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து பெல்ஜியம் பிரதமர் சார்லஸ் மைக்கேல் கருத்துத் தெரிவிக்கையில்,

''இது கண்மூடித்தனமான, கோழைத்தனமான தாக்குதல். இந்த நாள் நாட்டுக்கு கறுப்பு தினம். இந்தத் தருணத்தில் அனைவரும் அமைதி காத்து அரசுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும்'' எனத் தெரிவித்தார்.

வீட்டை விட்டு வெளியே வர மக்களுக்கு தடை

பிரஸ்செல்ஸில் மேலும் தாக்குதல் நடக்கும் அபாயம் உள்ளதால் பிரஸ்செல்ஸ் நகர மக்கள் வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சந்தேகிக்கும் நபர்களை தேடி வீடு, வீடாக பொலிஸார் சோதனை நடத்தி வருகின்றனர். பெல்ஜியம் எல்லை பகுதி சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பு சோதனைகள் தீவிரமாக நடக்கிறது.

## பழிவாங்கும் நடவடிக்கையா?

கடந்த நவம்பர் மாதம் பாரிஸ் நகரில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு குற்றவாளிகள் பிரசல்ஸ் நகரை சேர்ந்தவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த விவரம் வெளியான 4 நாட்களில் பெல்ஜியத்தில் இந்த குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த வருடம் 6 முக்கிய இடங்களில் நடத்திய அதிபயங்கர தாக்குதலில் 129 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதுடன், 352 பேர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டது. தாக்குதலில் தொடர்புடைய அலி சலாஹ் அப்துல் சலாம் கடந்த வாரம் பெல்ஜியத்தில் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது, பிரான்ஸ் அதிகாரிகளும் அவரிடம் விசாரிக்க தீவிரமாகவுள்ள இந்நிலையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்காத நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என அப்போது ஊகங்கள் மேலோங்கியிருந்தன.




துள்ளனர்.

''விமான நிலையத்துக்கு டொக்ஸியொன்றில் வந்த மூன்று தீவிரவாதிகள் தனித்தனியாக பிரிந்து தங்கள் கையிலிருந்த சூட்கேஸ்களை வெவ்வேறு 'துரொலி'களில் வைத்து விமா நிலையத்தின் புறப்பாட்டு பகுதியின் வரவேற்பு கூடத்துக்கு தள்ளிச் சென்றனர். கையுறை அணிந்திருந்த அவர்கள் தோள்களில் மாட்டியிருந்த கைப்பைகளில் வெடிகுண்டுகள் இருந்துள்ளது.

முதலில் மூன்று பேரில் இருவர் மட்டும் பைகளில் இருந்த குண்டுகளை வெடிக்க வைத்துள்ளனர். இன்னொருவன் பயந்து போய் குண்டை இயக்கி, வெடிக்க வைக்காமல் அங்கிருந்து ஓடியிருக்கக் கூடும்.

தனது பேட்டியின்போது இவ்வாறு தெரிவித்த லவன்டெம் நகர மேயர் பிரான்சிஸ் வெர்மெய்ரென், தப்பிச்சென்ற மூன்றாவது நபரை பொலிஸார் வலைவீசி தேடிவருவதாக கூறி, அவனது புகைப்படங்களை நிருபர்களிடம் காண்பித்துள்ளார்.

## தாக்குதல்தாரிகளின் அடையாளம்

பிரஸ்செல்ஸ் நகரில் தற்கொலைப்படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட ஆய்வில் உறுதி செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாது அவர்கள் மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முகத்தில் கண்ணாடி அணிந்தபடி, வெள்ளைநிற மேல்கோட், கருப்பு தொப்பியுடன் காணப்படும் குறுந்தாடி நபர், ஒரு ட்ரொலியில் தனது சூட்கேசை வைத்து தள்ளிச்செல்லும் காட்சிகள் அந்த புகைப்படங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தாக்குதலின்போது இறந்த தீவிரவாதியின் உடல் அருகே, ஒரு துப்பாக்கியும், விமான நிலைய வளாகத்தில் கிடந்த பெல்ட்டில் குண்டொன்றும் வெடிக்காத நிலையில் இருந்ததையும் பொலிஸார் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

விமான நிலையத்தில் தாக்குதல் நடத்திய இரு தற்கொலைப்படை தீவிரவாதிகளுக்கும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மூன்று இடங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்பு தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளுக்கும் இடையில் முன்னர் நெருங்கிய தொடர்பு இருந்ததாக தற்போது பிரசல்ஸ் நகர பொலிஸார் நடத்திவரும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாரிஸ் தாக்குதலில் தொடர்புடைய முக்கிய தீவிரவாதிகளில் ஒருவனான அப்துல் சலாம் என்ற தீவிரவாதியை பிடிக்க பிரசெல்ஸ் நகரில் சில சந்தேகத்துக்குரிய வீடுகளில் பொலிஸார் சமீபத்தில் அதிரடி சோதனை நடத்தினர்.

அவற்றில் ஒரு வீட்டில் குடியிருந்த காலித் பக்ரோவி மற்றும் அவரது தம்பியான இப்ராஹிம் அல் பக்ரோவி ஆகியோர் நேற்றுமுன்தினம் பிரசெல்ஸ் விமான நிலைய தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர் என பெல்ஜியம் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் இருவரும் ஏற்கனவே சில கிரிமினல் வழக்குகளில் தொடர்புடையவர்கள், எனினும், இவர்கள்மீது தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பான எந்த குற்றச்சாட்டும் இதற்கு முன்னர் பதிவாகவில்லை எனவும் அந்த செய்திகள் குறிப்பிடுகின்றன.

## உலக தலைவர்கள் கண்டனம்

இந்தத் தாக்குதலுக்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன், பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கொயிஸ் ஹொலன்டே, ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புடின், ஸ்வீடன் பிரதமர் ஸ்டீபன் லோப்வென் மற்றும் உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமல்லாது இலங்கை சார்பிலும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் குறித்து சுவீடன் பிரதமர் ஸ்டீபன் லோபன் கூறுகையில், ''இது ஜனநாயக ஐரோப்பா மீது நடத்தப்பட்ட தாக்குதல்'' எனத் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று டேவிட் கெமரூன், தனது டுவிட்டர் பக்கத்தில், ''இந்த தாக்குதல் சம்பவம் அதிர்'' என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ''பிரஸ்செல்ஸ் செய்திகள் கவலையளிக்கிறது. இது கண்டனத்துக்குரியது. பலியானவர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கல்கள்'' என தனது டுவிட்டர் பக்கதில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அதுமட்டுமல்லாது, இக்கொடூர தாக்குதலில் உயிரிழந்த அந்த உறவுகளுக்காக உலக முழுவதிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேவேளை ஈபிள் கோபுரம் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களில் வர்ண விளக்குகள் ஒளிர செய்து தமது நாட்டின் சார்பில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பாவில் பாதுகாப்பு தீவிரம்

பிரஸ்செல்ஸ் தாக்குதலையடுத்து பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

பெல்ஜியத்தின் அணுசக்தி ஆலைகள், பிரான்ஸின் ஸ்ட்ரோஸ்பர்க் நகரில், ஐரோப்பிய பாராளுமன்றமாகச் செயற்படும் ஐரோப்பிய யூனியன் கட்டடம் போன்ற முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

பிரசல்ஸ் நகரில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு, ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## கொண்டாட்டம்

ஐ.எஸ்., பயங்கவாத அமைப்பின் ஆதரவாளர்கள் பலர், தமது பேஸ்புக் மற்றும் டுவிட்டர் போன்ற சமூக வலைதளங்களில், இந்த தாக்குதலுக்கு மகிழ்ச்சி தெரிவித்து கருத்துக்களை பதிவு செய்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.




## தாக்குதலுக்கு ஐ.எஸ். பொறுப்பேற்பு

இந்த கொடூர தாக்குதல் சம்பவத்திற்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. முன்னதாக, 129 பேரை பலிகொண்ட பாரிஸ் தாக்குதலையும் ஐ.எஸ் அமைப்பு தான் நிகழ்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று நாட்கள் துக்கதினம்

இதனிடையே, வெடிகுண்டு தாக்குதல் எதிரொலியாக 3 நாட்கள் தேசிய துக்கம் அனுசரிக்கப்படும் என்று பெல்ஜியம் அரசு அறிவித்துள்ளது. இந்த தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா, இலங்கை, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

## நடந்தது என்ன?

பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் விலைமதிப்பில்லாத 35 உயிர்களை பறித்த தாக்குதல் நடந்தது எப்படி? என்று சவென்டம் நகர மேயர் தெரிவித்

மேலும், குண்டுவெடிப்பில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மூவரின் புகைப்படங்களை வெளியிட்டுள்ள படையினர் அவர்களைப் பற்றிய தகவல்கள் தெரிந்தால், தகவல் தருமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையில் நேற்று இத் கொடூர தாக்குதலை நடத்திய தற்கொலைப்படை தீவிரவாதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பெல்ஜியத்தின் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ள நிலையில்,



## தொடரும் தாக்குதல்:

**ஐரோப்பிய நாடுகளில் நடந்த, சில பயங்கரவாத தாக்குதல்கள்:-**

**2016 மார்ச் 22:** பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸ் விமான நிலையம் மற்றும் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த தாக்குதலில், 35 பேர் பலி.

**மார்ச் 15:** துருக்கி தலைநகர் அங்காராவில், குர்திஸ்தான் விடுதலைக் குழு நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில், 37 பேர் பலி.

**2015 நவம்பர் 15:** பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், பல்வேறு இடங்களில், ஐ.எஸ்., தீவிரவாதிகள் நடத்திய தொடர் தாக்குதலில், 129 பேர் பலி.

**2015 ஜனவரி 7:** பாரிஸில், சார்லி ஹெப்டோ நாளிதழ் அலுவலகம் மீது நடந்த தாக்குதலில், 12 பேர் பலி.

**2014 மே 24:** பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸ், சுவிஸ் மியூசியம் மீது நடந்த தாக்குதலில், 4 பேர் பலி.

**2012 மார்ச்:** தெற்கு பிரான்ஸில், அல் - கைதா நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 4 சுவிஸ் மாணவர்கள் பலி.

**2011 ஜூலை 22:** நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த தாக்குதலில், 77 பேர் பலி.

**2005 ஜூலை 7:** லண்டனில், அல் - கைதா நடத்திய தாக்குதலில், 52 பேர் பலி.




# மீண்டும் முருங்கை மரமேறும் வேதாளம்

ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்
சம்மாந்துறை

ஒரு சமயத்தை தெளிவாக கற்றுணர்ந்த எவரும் தவறான செயல்களில் ஈடுபடமாட்டார்கள்.பொது பல சேனாவின் நாமம் சில வருடங்களாக பல தவறான விடயங்களில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.நீதி மன்றங்கள் கூட எச்சரிக்கை விடுமளவு இவ் அமைப்பினது செயற்பாடுகள் அமைந்திருந்தன.இவ் அமைப்பினது செயற்பாடுகளே தர்கா டவுனில் முஸ்லிம்களுக்கெதிராக அரங்கேறிய கலவரத்திற்கும் காரணமாகியது.இவ் அமைப்பினது செயற்பாடுகள் பாராளுமன்றத்தில் பாரிய விவாதப் பொருளாகவும் மாறி இருந்தன.பல பௌத்த மதகுருக்களைக் கொண்டுள்ள இவ் அமைப்பினது இவ்வாறான செயற்பாடுகள் மிகவும் பாரதூரமான விளைவுகளை எதிர்காலத்திலும் ஏற்படுத்தலாம்.இவ் அமைப்பை கட்டுப்படுத்த வேண்டிய கடமை இலங்கை அரசுக்குள்ள போதும் இலங்கை அரசு வாய் மூடி வேடிக்கை தான் பார்க்கின்றது.முஸ்லிம்கள் மஹிந்த ராஜபக்ஷவை விட்டும் முற்றாக தூரமாக இவ் அமைப்பினது செயற்பாடுகளே பிரதான காரணமாகவும் அமைந்திருந்தன.புதிதாக தோற்றம் பெற்ற நல்லாட்சியின் ஆரம்பத்தில் இவ் அமைப்பினது வாய்க்கு பூட்டு போட்டாப் போலிருந்தாலும் நாள் செல்லச் செல்ல மீண்டும் வேதாளம் முருங்கை மரமேறிய கதையாக முஸ்லிம்களுக்கெதிரான தனது ஆட்டத்தை மீண்டும் பழைய உத் வேகத்துடன் ஆரம்பித்துள்ளது.

இவ் அமைப்பு ஹலால் சின்னத்தை இலங்கை நாட்டிலிருந்து விட்டொழிக்க மஹிந்த காலத்தில் செய்த முயற்சி வெற்றி பெற்றிருந்ததோடு, முஸ்லிம் பெண்கள் முக மூடுதல் உட்பட பல விடயங்களில் தனது பார்வையைச் செலுத்தியது. பொது பல சேனா அமைப்பு புதிதாக தோற்றம் பெற்றுள்ள நல்லாட்சியில் எல்லாவற்றிற்கும் ஒரு படி மேல் சென்று முஸ்லிம்கள் தங்களது உயிர்களுக்கும் மேலாக மதிக்கும் குர்ஆனில் இல்லாத பொல்லாதவற்றை இருப்பதாக கூறி கதை புனைந்தும் வருகிறது.தற்போது ஷரியா வங்கிகளுக்கு இலங்கை நாட்டில் வழங்கியுள்ள அங்கீகாரத்தை இல்லாமலாக்க முயன்று வருகிறது.இலங்கையில் உள்ள அநேகமான வங்கிகளில் ஷரியா வங்கிகளுக்கென ஒரு தனிப்பிரிவுள்ளது.ஓரிரு வங்கிகள் முற்றாக இஸ்லாமிய ஷரியா அடிப்படையை மையப்படுத்தியும் இயங்குகின்றன.இது தொடர்பில் பொது பல சேனா அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே கடந்த பெப்ரவரி மாதம் 26ம் திகதி ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பில் விளக்கியுள்ளார்.இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரியும் தனது மேலதிக செயலாளர் ஒருவர் மூலம் தேசிய கொள்கைத்திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பில் இரு வாரங்களுக்குள் அறிக்கை சமர்பிக்குமாறு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.பொது பல சேனாவின் கோரிக்கை நியாயமானதா? என்பதை சிந்திப்பதற்கு முன்பு இவ் விடயத்தில் ஆழச் சிந்திக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் பொது பல சேனா அமைப்பைத் தோற்றுவித்தார் என்ற கருத்து முஸ்லிம் மக்களிடத்தில் நிலவுகின்ற போதும் அது உண்மைத் தன்மை குறைவானதொரு கருத்தாகும்.இவர் பொது பல சேனா அமைப்பின் செயற்பாடுகளுக்கு நெகிழ்வுப் போக்கையே கடைப்பிடித்திருந்தார். இவர் ஓரிரு தடவைகள் பொது பல சேனா அமைப்புடன் பேச்சு நடாத்திருந்த போதும் பொது பல சேனாவின் விடயத்தில் இத்தனை கரிசனை காட்டியிருக்கவில்லை. இவ் ஆட்சியில் பொது பல சேனாவின் கோரிக்கைக்கு இரு வார எல்லையினுள் அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி மைத்திரி கோரிருப்பதானது பொது பல சேனாவை உச்சத்தில் தூக்கி நிறுத்துகிறது.இவ் அமைப்பின் சிந்தனைப் போக்கு ஜனாதிபதி மைத்திரியையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது என்பதுவே இச் செயலின் மறு வடிவமாகும்.இலங்கை சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட நாடாதலால் இலங்கை நாட்டில் பௌத்த மதத் தலைவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவில் அவ்வளவு இலகுவில் யாராலும் கை வைத்து விட முடியாதென்பது யதார்த்தம்.பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் கைது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அண்மையில் மரணித்த அஸ்கிரிய மகாநாயக்க தேரர் கலகம ஸ்ரீ அத்தஸ்ஸி தேரர் கலகொட அத்தே ஞானசார தேரரை நாடு மட்டும் இனம் தொடர்பில் உயிர்த் தியாகத்துடன் செயற்பட்டவரென வர்ணித்து இவர் தொடர்பான விசாரணையை சரியான முறையில் நடாத்த வேண்டும் என அரசை கோரியிருந்தமை இவ் விடயத்தை இன்னும் தெளிவாக நிறுவுகிறது.இவ் விடயத்தை இக் கோணத்தில் முஸ்லிம்கள் அணுகுவதாக இருந்தால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் இடத்திலிருந்தும் சிந்திக்க வேண்டும்.இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரரை புத்தரக்கித,சோமராம ஆகியோரிற்கு ஒப்பிட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றிருந்தார்.இவ் அரசு இப்படி தாங்களே மிகக் கீழ்த்தரமாக விமர்சித்தவர்களுடன் பேச்சுக்கள் நடாத்துவது ஏற்கத்தகுந்ததல்ல.

பொதுவாக ஷரியா அடிப்படையிலான வங்கி முறைமையானது முஸ்லிம்களின் பொருளாதாரத்தில் வட்டி கலந்துவிடாமல் முஸ்லிம்களை பாதுகாப்பதையே மையப்படுத்திருக்கும்.வட்டி இஸ்லாத்தில் மாத்திரம் தடுக்கப்பட்ட ஒன்றல்லமாறாக பௌத்த மதத்திலும் தடுக்கப்பட்ட ஒன்றாகும்.பொது பல சேனா அமைப்பானது இவ் விடயம் தங்கள் மதத்திலும் தடை செய்யப்பட்ட ஒன்று என்பதால் இவ்வாறான வங்கிகளை தாங்களும் உருவாக்குவதற்கு முயற்சித்திருக்க வேண்டும். உருவாக்காவிட்டாலும் பரவாயில்லை எதிர்க்காமலாவது இருக்கலாம்.பொது பல சேனாவானது இவ் விடயத்தில் தங்கள் மதத்தை உரிய முறையில் பின்பற்றினாலே எது வித பிரச்சினைகளும் எழாது.பொதுவாக இவ் வங்கிகள் இஸ்லாமிய ஷரியா அடிப்படையில் இயங்குவதாக பேச்சு வழக்கில் அதிகம் பாவிக்கப்படும்.ஷரியா என்றாலே மாற்று மதத்தவர்கள் பலரும் அதில் பொதிந்துள்ள விடயங்களை ஆராயாது ஒரு கண் கொண்டு பார்ப்பது வழமை.பொது பல சேனா அமைப்பும் ஷரியா என்றாலே தங்களுக்கு ஆகாத வார்த்தையாக நினைத்துக் கொண்டிருகின்றது.இவைகளை வைத்து நன்கு ஆராயும் போது பொது பல சேனாவானது இவ் விடயத்தை உள் சென்று ஆராயாது வார்த்தையை மாத்திரம் வைத்துக் கொண்டு முஸ்லிம்களுடன் வம்புக்கு வந்துள்ளது என்றே நினைக்கத் தோன்றுகிறது.

இவ் அமைப்பு ஷரியா வங்கி முறைமை பிரிவினைக்கு வித்திடுவதாக குற்றம் சாட்டியுள்ளது.இலங்கை நாட்டில் மத ரீதியான புரிந்துணர்வுகளை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளமையை மறுக்க முடியாது.இக் கருத்தை பேரின மக்களிடையே இனவாதத்தை விதைத்துவரும் பொது பல சேனா கூறுவதே நகைப்பிற்குரியது.மத ரீதியான சில பிரிவினைகள் தவிர்க்க முடியாதவைகள்.பௌத்தர்கள் புத்தரையும் முஸ்லிம்கள் அல்லாஹ்வையுமே வழிபட வேண்டும்.மத ரீதியான ஒற்றுமை வேண்டும் என்பதற்காக பௌத்தர்கள் முஸ்லிம்களை புத்தரை வழிபடுங்களெனக் கூறுவதில் எதுவித சிறு நியாயமுமில்லை. இது போன்றே இவ் விடயத்தை மத ரீதியான புரிந்துணர்வைக் காட்டி இல்லாதொழிக்க முயல்வதாகும். இச் ஷரியா முறையை இல்லாதொழிக்க வேண்டிய அவசியம் தான் என்ன? இது பேரின மக்களை எந்த வகையில் பாதிக்கின்றது? இம் முறைமையைப் பின் பற்ற முஸ்லிம்கள் ஒரு போதும் பௌத்தர்களை நிர்ப்பந்திப்பதுமில்லை.இம் முறைமையை பேரின மக்களும் பின்பற்றினால் வட்டியினால் வலுவிழந்து போகும் ஏழை மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியுமே தவிர இம் முறைமை பேரின மக்களை சிறிதும் பாதிக்க வாய்ப்பில்லை.தங்களைப் பாதிக்காத போது அதனை பேரின மக்கள் எதிர்க்க வேண்டிய அவசியமுமில்லை.

இன்று வட்டியை பிரதான இலாபமாக கொண்டு இயங்கும் வங்கிகளிலும் இஸ்லாமிய ஷரியா அடிப்படையிலான தனி அலகுகள் இயங்குகின்றன.இது தொடர்பில் முஸ்லிம்களிடையே பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன.ஓரிரு வங்கிகள் தான் இஸ்லாமிய ஷரியாவை பின்பற்றி இயங்குகின்றன.இவைகள் தொடர்பிலும் அனைத்து முஸ்லிம்களுக்கும் பூரண உடன்பாடு இருப்பதாக குறிப்பிட முடியாது.இவ் வங்கிகள் மூலம் கிடைக்கும் இலாபங்கள் சில தீவிரவாத அமைப்புக்களுக்கு செல்லுவதாகவும் பொது பல சேனா குற்றம் சாட்டியுள்ளது.இலங்கையில் சில தீவிரவாத அமைப்புக்கள் இயங்குவதாக குட்டையைக் குழப்பி பேரின மக்களிடையே மீன் பிடிக்க முயல்வது பொது பல சேனாவிற்கு கை தேர்ந்த கலையாகிவிட்டது.இவ் வங்கிகள் மூலம் தீவிரவாத அமைப்புக்களுக்கு பணம் அனுப்பப்படுமாக இருந்தால் அது நிச்சயம் தடுக்கப்பட வேண்டிய ஒன்று தான் என்பதை மறுப்பதற்கில்லை.இலங்கையின் புலனாய்வுத் துறை மிகவும் திறமை வாய்ந்தது.இவ் வங்கிகள் தீவிரவாத அமைப்புக்களின் வளர்ச்சிக்கு உதவுமாக இருந்தால் அதனை பொது பல சேனா சுட்டிக் காட்டி இலங்கையரசு அறியும் நிலையிருக்காது.இவ் வங்கிகள் மூலம் தீவிரவாதிகள் பலம் பெறுவதை இலங்கை நாடு அறியுமாக இருந்தால் அதனைத் தடுக்கும் முதல் நாடாக இலங்கை இருக்குமென்பதிலும் ஐயமுமில்லை.யுத்தம் எந்தளவு ஆபத்தானதென்பதன் அனுபவங்கள் இலங்கையிடம் நிறையவே உள்ளன.தனது இக் குற்றச்சாட்டு தொடர்பில் பொது பல சேனாவிடம் ஏதேனும் ஆதாரம் இருப்பின் அதனை இலங்கை அரசாங்கத்திடம் கூறுவதை விட அமெரிக்காவிடம் கூறினால் அமெரிக்க விழுந்தடித்து வந்து இவ் விடயத்தில் கை வைக்கும். இந்தக் குற்றச்சாட்டை பொது பல சேனா அணுகும் முறைமையைப் பார்க்கும் போது பொது பல செனாவிடம் இது தொடர்பில் ஆதாரங்கள் எதுவுமில்லை என்பது புலனாகிறது.

இப்படி சிறிதும் சிந்திக்க தேவையற்ற இவ் விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெரியதொரு விடயமாக தூக்கிப் பிடித்துள்ளதை அவதானிக்கும் போது இவர் இனவாதிகளுடன் ஒத்திசைந்து செல்லும் போக்கை கடைப்பிடிக்க முயல்வது தெளிவாகிறது.அண்மையில் சிங்கள நாளிதழ்களில் ஒன்றான ராவய பத்திரிகையின் விசேட கட்டுரையொன்றில் மஹிந்தவின் வழியில் மைத்திரியும் இனவாதிகளை திருப்திபடுத்த முயல்வதாக குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.நீங்கள் இவ்வாறு கூறுகின்றீர்களே! பொது பல சேனாவின் செயலாளர் ஞான சார தேரரை இவ் அரசு கைது செய்துள்ளது தானே? எனக் கேட்கலாம். ஞான சார தேரர் இலங்கையின் நீதித் துறையை சவாலுக்குட்படுத்தும் வகையில் நீதி மன்றத்தில் செயற்பட்டதாலேயே கைது செய்யப்பட்டிருந்தார்.இது குறித்த நீதிபதியின் அதிரடித் தீர்மானங்களில் ஒன்றாகவே பார்க்கத் தோன்றுகிறது.இதன் பிறகு குறிக்க நீதிபதிக்கு வழங்கப்பட்ட அழுத்தங்களால் அவர் குறித்த வழக்கிலிருந்து விலகப் போவதாக அறிவித்திருந்தார்.ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொடவின் வழக்கை நடாத்திய அரச சட்டவாளர் திலிப் பீரிஸ் இச் சம்பவத்தின் பின்னர் நீக்கப்பட்டுமிருந்தார்.ஞானசார தேரரை கைது செய்யுமாறு நீதி மன்றம் உத்தரவிட்டதன் பின்னர் ஒரு பதட்டமான சூழ் நிலை தோற்றுவிக்கப்பட்டிருந்தது.பிறகு ஞானசார தேரரே தாமாக வந்து நீதி மன்றில் சரணடைந்திருந்தார்.இதன் பிறகு இவரை தடுப்புக் காவலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது.இதனைத் தொடர்ந்து நெத் எப்.எம் சிங்கள வானொலிக்கு கருத்துத் தெரிவித்த ஜினானந்த தேரர் ஞானசார தேரருக்கு பிணை வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நம்பியே அவர் நீதி மன்றத்திற்கு சென்றதாகக் கூறி இருந்தார்.மேலுள்ள இச் சுட்டிக் காட்டல்கள் பொது பல சேனா அமைப்பானது இலங்கையின் நீதித்துறைக்கே சவால் விடும் வகையில் இவ் அரசில் மிகப் பலம் வாய்ந்ததாக உள்ளதைத் தான் எடுத்துக்காட்டுகிறது.

இவர் இவ்வாறு நடந்து கொண்ட காலப் பகுதி இலங்கை நீதித்துறையின் சீரிய கட்டமைப்பை சர்வதேசத்திற்கு வெளிக்காட்ட வேண்டிய ஒரு காலப்பகுதியாகும்.ஏற்கனவே சர்வதேச அரங்கில் இலங்கையின் நீதித் துறையின் மீது அவ்வளவு நம்பிக்கையில்லை.இக் காலப்பகுதியில் பொது பல சேனா செயலாளரின் இச் செயற்பாட்டை இலங்கை நீதி மன்றம் உரிய விதத்தில் கண்டிக்கத் தவறும் போது அது இலங்கை அரசிற்கு சர்வதேச அரங்கில் மிகவும் ஆபத்தான விளைவுகளையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.இச் சந்தர்ப்பத்தில் ஐ.நா சபைக்கான மனித உரிமை ஆணையாளரும் இலங்கைக்கு வருகை தர இருந்தார்.ஏற்கனவே பொது பல சேனா அமைப்பு சிறு பான்மை இனத்தவர்களின் எதிரியாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ் வேளையில் இவரை கைது செய்து சிறையில் தள்ளுவது இலங்கையில் நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையை சர்வதேச அரங்கில் ஏற்படுத்துவதற்கான ஒரு சமிக்ஞையாக சர்வதேசம் நோக்கவும் ஏதுவாக அமையும்.அதாவது ஞானசார தேரர் கைது செய்யப்பட்ட காலப்பகுதியும் அவரது கைதில் பாரிய தாக்கத்தை செலுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.இது சில வேளை சர்வதேசத்திற்கு தங்களை நல்ல பிள்ளைகளாக வெளிக்காட்ட இவ் அரசினால் அரங்கேற்றப்பட்ட மிகத் திட்டமிடப்பட்ட ஒரு நாடகமாகவும் இருக்கலாம். தற்போது சர்வதேச அரங்கில் இலங்கை நீதித் துறையின் மீது நம்பிக்கை துளிர் விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.இவரைக் கைது செய்த போது இலங்கை அரசுக்கும் பொது பல சேனாவிற்குமிடையே ஒரு போர் மூண்டது போன்றே காணப்பட்டது.தற்போது ஷரியா வங்கி விடயத்தை வைத்து நோக்கும் போது இவ் அரசுடன் பொது பல சேனா தேனிலவு கொண்டாடுவது போன்றுள்ளது.இவைகளே இவ்வாறான சந்தேகங்களை கிளறியும் விடுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஞானசார தேரருக்கு பிணை வழங்கப்படாமல் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டமை ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியை அச்சுறுத்திய விவகாரத்தினாலாகும்.பிரகீத் எக்னெலிகொடவின் விவகாரம் சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு சவாலை ஏற்படுத்தியுள்ள விவகாரங்களில் ஒன்றாகும்.2012.05.03ம் திகதி பிரான்ஸ் மற்றும் கிரேக் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இடம்பெற்ற ஊடக தின நிகழ்வில் பிரகீத் எக்னலிகொட தொடர்பில் இன்டசிட்டி பிரஸ் கேள்வி எழுப்பி இருந்தது. அந்தக் கேள்விக்கு அந் நேரத்தில் யாரும் பதில் அளிக்கவில்லை.இதன் போது அந் நிகழ்வில் பங்கேற்றவர்கள் இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பாங்கி மூன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சுமத்திருந்தனர்.தற்போது பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியைக் கொண்டு பாரிய அரசியல் நகர்வுகளும் மேற்கொள்ளப்படுகிறது.இச் சந்தர்ப்பத்தில் இவரது மனைவியை அச்சுறுத்துவது இலங்கை அரசுக்கு அவ்வளவு உசிதமானதுமல்ல.பொது பல சேனாவின் செயலாளரா? ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியா? என்ற வினா எழும்பும் போது தற்போதைய நிலையில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவிக்கு அதிகம் முக்கியத்துவம் வழங்குவதே பொருத்தமானது.

பொது பல சேனா முஸ்லிம்களுக்கெதிராக அரங்கேற்றிய நிகழ்வுகளில் ஒன்றைக் காரணம் காட்டி அதனைக் கைது செய்யும் போதே முஸ்லிம்களின் உள்ளம் பூரண சாந்தியுறும்.முஸ்லிம்களின் விடயத்தில் கை வைத்த ஒன்றைக் காரணம் காட்டி ஞானசார தேரரை கைது செய்யும் போது அது இவ் அரசுக்கு பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.இதன் காரணமாக இவ் விடயத்தை அரசு இவரிற்கு எச்சரிக்கை விடும் ஒன்றாகவும் பயன்படுத்திருக்கலாம்.எனினும்,இவர் எச்சரிக்கை விடுமளவான காரியங்களைச் செய்தவரல்ல.இதனையும் இன்னும் சிலவற்றை கிளறியும் சூட்டோடு சூட்டாக அரசு இவரை முற்றாக அடக்கிருக்க வேண்டும். ஞானசார தேரர் சிறையிலிருந்த காலத்தில் கூட அவரை அரசால் முற்றாக அடக்க முடியவில்லை.அங்கிருந்து கொண்டும் தனது ஆட்டத்தை தொடர்ந்திருந்தார். சிறையை விட்டு வெளியேறிய ஞானசார தேரர் சிங்கள ராவய,ராவண பலய போன்ற அமைப்புக்களை இணைத்து ஒரு கூட்டையும் தோற்றுவித்துள்ளார்.இதுவெல்லாம் முஸ்லிம்களுக்கு ஆரோக்கியமான சமிக்ஞைகளல்ல.

என்னிடம் அனுமதி பெறாமல் பௌத்த பிக்குகளை கைது செய்ய வேண்டாமெனக் கூறி மைத்திரி தனது ஆட்சியில் பௌத்த மதகுருக்களுக்கு உயரிய ஸ்தானத்தை வழங்கியுள்ளார்.இவ் விடயம் சாதாரண ஒரு மகனுக்கும் பௌத்த பிக்குவிற்குமிடையில் கடைப்பிடிக்கும் நீதிக்கிடையிலுள்ள வேறுபாட்டைக் காட்டுகிறது. நீதி அனைவருக்குமிடையில் சமனாகவே நிலை நிறுத்தப்படல் வேண்டும்.சாதாரண மக்களுக்கு சரியான பாதையை காட்டக் கூடிய சமயத்தை கற்றுணர்ந்தவர்கள் விடயத்தில் சற்று கடுமையாக இருந்தாலும் சிறப்பானதே.இவ்வாறான சொல்லாடல்களை மஹிந்த அரசில் அறியக்கிடைக்கவில்லை. இவ் அரசு இனவாதச் செயற்பாடுகளில் மஹிந்தவை விஞ்சுகிறதா என்ற வினா எழுகின்ற போதும் அக் காலத்தில் இவ்வாறான சொல்லாடல்களின் தேவை பெரிதும் எழுந்திருக்கவுமில்லை என்பதையும் ஏற்கத்தான் வேண்டும்.ஜனாதிபதி மைத்திரியின் இக் கூற்றை ஒரு கோணத்தில் நோக்கும் போது பிழை போன்று தோன்றினாலும் இன்னுமொரு கோணத்தில் இவ் விடயம் மிகக் கவனமாக கையாள வேண்டிய ஒரு விடயம் என்பதால் சரியெனவும் நினைக்கத் தோன்றுகிறது. தற்போது இவ் அரசு பேரின அமைப்புக்களுடன் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க ஒரு சிறு நியாயமுமுள்ளது.இவ் ஆட்சியில் பல பௌத்த மத குருக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.இன்னும் இன்னும் பௌத்த பிக்குகள் கைது செய்யப்படும் போது அது பேரின மக்களிடையே இவ் அரசின் மீது அதிருப்தியடையத் தோற்றுவித்து பாரிய போராட்டங்களுக்கு காரணமாகலாம்.எது எவ்வாறு இருப்பினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிக்கு வாக்களித்து இலங்கை முஸ்லிம்கள் ஜனாதிபதி மைத்திரிக்கு கூறிய முதற் செய்தி இந்த பொது பல சேனா அமைப்பை கட்டுப்படுத்துங்கள் என்பதாகும்.வருடங்கள் பல கடந்தும் இவ் அரசால் பொது பல சேனாவின் முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகளை சிறிதும் கட்டுப்படுத்த முடியாமை மிகவும் வேதனையளிக்கிறது. இவ் அரசு அதன் கோரிக்கைகளை ஆராயும் நிலைக்குச் செல்வது முஸ்லிம்களிடையே அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.



# நலம் வாழ

செ.தர்ஷிகா

## இன்று சர்வதேச காசநோய் எதிர்ப்பு தினம்

# காசநோயை வரவழைக்கும் பிரதான காரணிகள்!

மைக்கோ பக்ரீரியம் (Mycobacterium tuberculosis ) எனப்படும் ஒருவகைப் பக்ரீரியாவினால் ஏற்படும் ஒரு தொற்று நோய். இது ஒரு பரம்பரை நோயல்ல. Tuberculosis (TB) எனப்படும் இந் நோய் காற்றின் மூலம் பரவுகின்றது. சுவாசத்தின் மூலம் தொற்றும். இந் நோய்க்கிருமிகள் பெரும்பாலும் சுவாசப்பையில் நோயை ஏற்படுத்துகிறது. உலகில் 1/3 பங்கினர் காசநோய்க்கிருமித் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளார்கள். காசநோய்க்கிருமி தொற்றுக்குள்ளான அனைவருக்குமே காசநோய் ஏற்படுவதில்லை. ஆனால் ஒருவரது நோயெதிர்ப்பு சக்தி குறைவடையும் சந்தர்ப்பத்திலேயே அவருக்கு காசநோய் ஏற்படுகிறது.

**காசநோயின் அறிகுறிகள்**

★ தொடர்ச்சியாக மூன்று வாரங்களிற்கு மேலான இருமல்.

★ சளியுடன் இரத்தம் வெளியேறல்

★ நிணநீர் கணுக்கள் வீங்குதல், நெஞ்சு வலி போன்ற நோயறிகுறிகளும் காணப்படும்.

★இரவு நேரக் காய்ச்சல்

★ உடல் நிறை குறைவடைதல்

★உணவில் விருப்பமின்மை

★இரவு நேரத்தில் வியர்த்தல்

★ களைப்பாகக் காணப்படல்



**காசநோய்க் கிருமி**

பக்ரீரியம் (Mycobacterium tuberculosis) கலமென்சவ்வின் 200இற்கு மேற்பட்ட பிறபொருள் பதார்த்தங்களைக் கொண்டுள்ளது. அதனாலேயே இதற்குத் தடுப்பு மருந்து கண்டுபிடித்தல் கடினமாக உள்ளது. நுணுக்குக் காட்டியில் கிருமிகள் மெல்லிய நீண்ட வளைவாகத் தனித்தனியே அல்லது கூட்டமாகக் காணப்படும். பக்ரீரியாவின் கலச்சுவர் அதிக கொழுப்பைக்கொண்டது. நுணுக்கு காட்டி மூலம் பார்க்கையில் செந்நிறமாக இருக்கும்.

**இலங்கையில் காசநோய்**

இலங்கையில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் மக்களில் 54 பேர் காசநோயால் பாதிக்கப்படுகின்றனர் இதில் 25 பேர் சளியில் கிருமி உள்ள காசநோயாளிகள். ஆண்டுதோறும் 9000 காசநோளாளர் சிகிச்சை பெறுகின்றனர். இதில் 4500 பேர் சளியில் கிருமி உள்ள காசநோயாளிகள். இலங்கையில் காசநோயாளிகள் அதிக அளவில் நெருக்கமான நகரங்களில் உள்ளனர். கிராமப்புறங்களில் சளிப்பரிசோதனை செய்யும் வசதிகள் குறைவு என்பதால் காசநோயாளர் இனம் காணப்படல் குறைவாக உள்ளது.

காசநோய் உள்ளதா என்பதை அறிவது எப்படி ?,3 கிழமைகளுக்கு மேல் தொடர்ச்சியான இருமல் ,மாலை நேரக் காய்ச்சல் ,உடல் நிறைமிழப்பு ,இருமும் போது இரத்தம் வெளியேறல்,உணவில் விருப்பமின்மை,உறவினர் ஒருவருக்கு காசநோய் இருந்தால்,சுவாசிப்பதில் சிரமம் ,இரவில் வியர்த்தல்,நெஞ்சு நோவு

மேற்கூறிய அறிகுறிகள் காணப்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலையில் சளிப் பரிசோதனையை கட்டாயமாக செய்து கொள்ள வேண்டும்.

**காசநோய் பரவும் விதம்**

★காசநோயால் பாதிக்கப்பட்டவர் சிகிச்சையெடுப்பது இருப்பதனால், இருமும் போதும், தும்மும் போதும், கதைக்கும் போதும்,எச்சில், சளியினைத்துப்பும் போதும் கிருமிகள் காற்றினை அடைகின்றன.

ஒருவருக்கு நோய் தொற்றுவது அவர் காசநோய்க்கிருமிகள் உள்ள காற்றினை எவ்வளவு நேரம் சுவாசிக்கிறார் என்பதிலும் காசநோய்க்கிருமிகளின் செறிவிலும் தங்கி உள்ளது. எனவே காற்றோட்டமான, சூரிய ஒளி உள்ள இடத்தில் வாழ்வதால் காசநோய்க்கிருமிகள் தொற்றும் வாய்ப்புக்குறைவு.

மருந்துகளை ஒழுங்காக எடுக்காதவிடத்து ஏற்படும் பாதிப்புக்கள்

சரியான அளவு மருந்துகளை உரிய காலத்திற்கு உபயோகிக்காது விடுமிடத்து மருந்திற்கு எதிர்ப்புத்தன்மை உடைய காசநோய்க்கிருமிகள் உருவாகும். இதனால் தனது குடும்பத்தினருக்கும் அயலவர்கள் நண்பர்களிற்கும் நோய்த்தொற்றை ஏற்படுத்துவார்.மருந்துகளை சரிவரப் பாவிக்காதவர்கள் 50% மானோர் 5 வருடங்களிற்குள் இறந்து விடுகின்றனர். இடைநடுவே சிகிச்சையினைக் கைவிடுபவர்களுக்கு மீளவும் சிகிச்சையினை ஆரம்பித்தல். பொருளாதார ரீதியிலும் உளரீதியிலும் சுமையாக அமையும்.

**காசநோய்க் கிருமி பரவாது பாதுகாக்க**

★ நோயாளி இருமும் போதும் தும்மும் போதும் கைக்குட்டையால் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும்.

★ கண்ட கண்ட இடங்களில் துப்பக்கூடாது. நோயாளியின் சளியினை புதைக்க வேண்டும் அல்லது எரிக்க வேண்டும்.

★ நோயாளி ஆரம்பத்திலேயே இனங்காணப்பட்டு பூரணமாக உரிய சிகிச்சை பெறப்பட வேண்டும்.

★ நோயாளியுடன் நெருங்கிய தொடர்புடைய அனைவரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

★ போஷாக்கினை நல்ல நிலையில் பேணுவதுடன் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

★குளிரூட்டப்பட்ட இடங்களில் காசநோய்க்கிருமிகள் அதிக நேரம் உயிர் வாழும். எனவே அவ்விடங்களிலும் சனக்கூட்டம் அதிகமாக உள்ள இடங்களிலும் அதிகமாக நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.

காசநோயும் கர்ப்பிணித் தாய்மாரும்

கர்பிணித்தாய்மாராக இருந்தாலும் காசநோய்க்கான மருந்தினை நோய் ஏற்படின் எடுக்க வேண்டும். பாலூட்டும் தாய்மாரும் நோய் ஏற்படின் காசநோய்க்கான மருந்தினை எடுப்பதுடன், குழந்தைகளுக்கு தொடர்ந்து தாய்ப்பாலூட்டல் அவசியம்.

காசநோயும் எயிட்ஸ் நோயும்

எயிட்ஸ் நோயாளிகளில் 50% மானோர் காசநோய்த் தொற்றாலேயே இறக்கின்றனர். காசநோயாளிகளுக்கு எயிட்ஸ் நோய் வரும் சாத்தியம் இல்லை. ஆனால் எயிட்ஸ் நோயாளிகளுக்கு காசநோய் வரும் சாத்தியம் அதிகம் உண்டு எனவே காசநோயாளிகளை எயிட்ஸ் நோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அவசியம். காசநோயாளிக்கு எயிட்ஸ் நோய் காணப்படும் போது முதலில் காசநோயிற்கே சிகிச்சை அளிக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

# பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல மறுப்பது ஏன்?

கடந்தவாரத்தொடர்ச்சி...

இவ்விடயத்தில் கூடுதல் கவனம் எடுப்பது பெற்றோர்களின் கடமை அல்லவா?

நீ முதலாம் பிள்ளையாகத்தான் வர வேண்டும் மேலும் பாடங்களில் நூற்றுக்கு நூறு புள்ளிகள் எடுக்க வேண்டும். என்று உறுதியாகக் கூற வேண்டாம் இவ்வாறான பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யமுடியாமல் போகின்ற போது தன்னம்பிக்கை இழந்து தற்கொலை செய்யும் எண்ணம் அதிகரிக்கின்றது. எனவே பிள்ளைகளின் இதுவிடயத்தில் நிதானமாக இருப்பதுடன் அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவமளித்து அவர்கள் எத்துறையில் கூடுதல் ஈடுபாடு உடையவர்களாக இருக்கின்றார்களோ அத்துறையை அவர்களுக்காக தேர்ந்தெடுத்து வழிகாட்டுங்கள்.

செல்லப்பிள்ளை என்பதற்காக எந்த வேலையும் செய்ய விடாமலும் பழக்காமலும் இருந்து விடுகின்றார்கள். இதனால் முற்றுமுழுதாக இவர்கள் பெற்றோர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

சில அவசர சந்தர்ப்பங்களில் கூட தங்களை தயார்படுத்தி பாடசாலை செல்லமுடியாத நிலை ஏற்பட்டு வீட்டிலேயே தங்கிவிடுகின்றார்கள்.

எனவே பிள்ளைகளை ஓரளவுக்கேனும் அன்றாட வேலைகளை அவர்களாகவே செய்ய ஊக்கப்படுத்துங்கள். ஆர்வமூட்டுங்கள்,இவைகள் தவிர வேறு பல காரணங்களாலும் பிள்ளைகள் பாடசாலை செல்ல மறுக்கலாம்.

இவைகளை கண்டு பிடித்து அவற்றுக்கு ஏற்றவழி வகைகளைச் செய்து கொடுப்பதற்குப்பதிலாக சில பெற்றோர்கள் பிள்ளைகளை ஏனையவர்கள் முன்னிலையில் தண்டிப்பதையும் பயமுறுத்துவதையும் காணலாம். இதனால் பிள்ளைகளுக்கு தாழ்வு மனப்பான்மை, குற்றவுணர்வு, விரக்தி போன்ற நிலைகளினால் மன அழுத்தத்திற்கு உள்ளாவதுடன் எதிர்காலத்தில் இவர்களிடத்தில் பழி வாங்கும் எண்ணம் மேலோங்கி பெற்றோரை வதைக்கக் கூடியவர்களாக முரட்டுத்தனமாக மாற வாய்ப்புண்டு. பிள்ளைகள் தங்களாகவே பாடசாலை செல்லஆயத்தமாகி இருந்தாலும் அவர்களின் உடைகளை சரி செய்வது போன்று காட்டுவதும் அவர்களை அரவணைத்து முத்தமிட்டு வழியனுப்பி வைக்கும் போது பெற்றோர்கள் தன் மீது அக்கறையாக இருக்கின்றார்கள் என்று நினைத்து படிப்பில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஊக்குவித்தல் உதாரணம் காட்டல், சமூகத்தில் நடிபங்கு என்பவற்றைத் தெளிவுபடுத்தல் போன்றவற்றின் மூலம் எதிர்கால இலட்சியத்தைப் பலப்படுத்துங்கள். இதனால் இலக்கை நோக்கிப் பயணிக்க இலகுவாக இருக்கும்.

பிள்ளைகள் கல்வியின் பால் ஆர்வம் காட்டுவதற்கு பிரபல உளவியலாளரான மாஸ்லோவின் பங்களிப்பு முக்கியமாக குறிப்பிடத்தக்கதாகும். இவர் தனது ''தேவைக்கொள்கை''யில் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இவற்றில் ஏதேனும் ஒன்று நிறைவேறாத பட்சத்தில் கல்வியில் நாட்டம் குறைவானவர்களாகக் காணப்படுவார். உணவு, காப்பு, அன்பு கனிப்பு சுயதிறனியத்தேவை என்பன முக்கியமான அடிப்படைத்தேவைகளாகும்.

தொடரும்....

Dr.H.Mohamed Hariz
BUMS( Uni.of colombo)
Dip.Psycological Councelling



# வெப்ப காலநிலையால் ஏற்படும் கொப்புளங்களுக்கு கிரீம் பயன்படுத்தாதீர்கள்.....



தற்போது நாட்டில் அதிகப்படியான வெப்பம் காரணமாக பல்வேறு நோய்கள் ஏற்படுகிறது. நிலவும் மோசமான காலநிலையால் சிறுபிள்ளைகளுக்கு சருமத்தில் கொப்புளங்கள் ஏற்படுகின்றன. அதற்கு எக்காரணம் கொண்டும் கிரீம் வகைகளை பயன்படுத்தக்கூடாது என வைத்தியத்தரப்பு தெரிவிக்கின்றன. சிறுபிள்ளைகளுக்கு வைரஸ் தொற்று மூலமாக சரும அழற்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக ருகுண மருத்துவ பீடத்தின் சிறுவர் நோய்கள் தொடர்பான வைத்திய நிபுணர் சுஜீவ அமரசேன தெரிவித்தார். கை, கால் மற்றும் வாய்கள் மற்றும். உடலில் ஏற்படும் அழற்சிக் கொப்புளங்களைப் போல காணப்பட்டாலும் அவற்றை கொப்புளங்கள் என நினைப்பது தவறு.பொக்சகி எனப்படும் வைரஸினால் இந்த நோய் ஏற்படுகிறது.

இந்த வைரஸ் தாக்குதலினால் சிறுவர்களின் கை, மற்றும் கால் பகுதிகளில் கொப்புளங்கள் போன்று ஏற்படும். இது வலிக்கவோ அரிக்கவோ எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. நான்கு நாட்கள் இந்த கொப்புளங்கள் கறுப்பு நிறமாக மாற்றமடைந்து இல்லாமல் போய்விடும்.பின் இருவாரங்கள் கழித்து கொப்புளங்கள் இருந்த இடங்களில் காணப்பட்ட கறுப்பு வடுக்களும் மறைந்து போகும்.இதற்கு விசேடமாக மருந்துகள் தேவையில்லை. வாய்க்கொப்புளங்களினால் ஏற்படும் வலியினைத்தவிர்த்துக்கொள்ள மருந்துகளை பயன்படுத்த வேண்டி ஏற்படும். இந்த வைரஸினால் ஏற்படும் நோய்க்கு கிரீம்களை பொதுமக்கள் பாவிப்பதைத் தவிர்த்துகொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக அதிகளவு நீரை பருக வேண்டும்.



# நல்லவேளையின் மருத்துவம்



பொதுவான குணம் நல்ல வேளைச் செடி மழை காலங்களில் சாலையோரங்களிலும், தரிசு நிலங்களிலும் வளர்கிறது.

ஆங்கிலப் பெயர்: GYNANDROPSIS PENTAPHYLLA.

தாவரக்குடும்பம் :- CAPPARIDACEAE.

மருத்துவ குணங்கள்

இலை நீர்கோவை நீக்கும் மருந்தாகவும், விதை இசிவு அகற்றியாகவும், வயிற்றுப் புழுக் கொல்லியாகவும், குடல் வாயுவகற்றியாகவும் பயன்படுகிறது.

இதை இடித்துப் பிழிந்துவிட்டுச் சக்கையைத் தலையில் வைத்துக் கட்டியெடுக்க நீர்க்கோவை, தலைப்பாரம், தும்மல் தலையில் குத்தல் குடைச்சல் ஆகியவை தீரும்.

இலை 1 பிடி, சுக்கு 1 துண்டு, மிளகு 6, சீரகம் 1 துளி அரைத்து அரை லீட்டர் நீரில் இட்டு 200 மி.லி. யாகக் காய்ச்சி, தினம் 3 வேளை 50 மி.லி. அளவாய் குடித்து வர வாதச்சுரம் சீதளச் சுரம் ஆகியவை தீரும்.

நல்ல வேளை இலைச்சாறு ஒரு துளி காதில் விட்டு வர சீழ்வடிதல் நிற்கும்.

நல்ல வேளை இலையை அரைத்துப் பற்றுப் போடச் சீழ் பிடித்துக் கட்டிகள் உடைந்து ஆறும்.பூச்சாறு 10 துளி தாய்ப்பாலில் கலந்து பிறந்த குழந்தைகளுக்குக் கொடுக்கக் கபம், கணமாந்தம் சளி நிறைந்து மூச்சுத்திணறல், சுரம், நீர்கோவை ஆகியவை தீரும். விதையை நெய்விட்டு வறுத்து பொடித்து சிறுவருக்கு அரை கிராம், பெரியவருக்கு 4 கிராம் விதம் காலை மாலையாக மூன்று நாள் கொடுத்து நான்காம் நாள் (விளக்கெண்ணெயில்) பேதிக்குக் கொடுக்கக் குடலிலுள்ள தட்டைப்புழுக்கள் கழியும்.

# டாக்டரிடம் கேளுங்கள்



**வாசகர்களே....**

நோய்கள் தொடர்பான கேள்விகளுக்கு பிரபல டாக்டர்கள் பதிலளிக்கவுள்ளார்கள். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.

**டாக்டரிடம் கேளுங்கள்**
**நவமணி, 156, ஆஸ்பத்திரி வீதி, தெஹிவளை.**

**கேள்வி:**

எனது அரைப் பகுதியில் (தொடைக்கிடையில்) அடிக்கடி சொறிச்சல் மற்றும் புண் ஏற்படுகிறது. மருந்து எடுக்கும் போது குறைகிறது. பிறகு மீண்டும் வருவதற்கான காரணம் என்ன?

(கோபாலன், மன்னார்)

**பதில்:**

ஈரலிப்பான நிலையில் உள்ளாடைகள் அணிவது,இறுக்கமான உள்ளாடைகள்,அதிகளவான வியர்வை, பருத்த உடல்,சுத்தமின்மை போன்ற காரணங்களால் தொடைகளுக்கிடையில் வியர்வை மற்றும் உராய்வு போன்றவற்றால் பக்றீரியா, பங்கசு போன்ற கிருமித்தாக்கங்களால் மேற்சொன்ன நோய்கள் ஏற்படலாம்.

**கேள்வி:**

எனது காலில் புண் நீண்ட காலமாக குணமடையாமல் இருக்கிறது. என்ன காரணம். சொல்ல முடியுமா?

(ஸெய்னப், மினுவாங்கொடை)

**பதில்:**

- நீரிழிவு நோய் மற்றும் காலில் உள்ள(varicose vein) வீங்குவது

- மதுபாவனை, புகைத்தல் மற்றும் சில மருந்துப் பொருட்களை தொடர்ச்சியாக உள்ளெடுத்து வருதல் (உதாரணம்) Steroids போன்றவை புண் குணமடைவதை தாமதமடையச் செய்யும். எனவே அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று மேலதிகமான சிகிச்சைகளைப் பெறவும்.

**கேள்வி:**

நான் கடந்த வாரம் கட்டாரில் இருந்து வந்தேன். அங்கு எனது அறையில் வெளிநாட்டு நண்பர் ஒருவரும் இருந்தார். அவருடன் ஒன்றாக சகனில் சாப்பிட்டும் ஒரு கிளாஸில் தண்ணீரும் குடித்து இருக்கிறேன். சில வேளைகளில் அவர் எனது உடைகளைப் பாவிப்பார். அவர் ஒரு எயிட்ஸ் நோயாளி என்பது எனக்கு பிறகுதான் தெரியும். எனக்கும் அந்த நோய் ஏற்பட்டு இருக்குமா என்று மிகவும் பயமாக இருக்கிறது. என்ன செய்ய வேண்டும்? தயவு செய்து பதில் தரவும்?

(இஸ்மதுல்லா, கொழும்பு)

**பதில்:**

எயிட்ஸ் நோயானது சாதாரணமாக ஒன்றாக சாப்பிடுவது, குடிப்பது போன்றவற்றால் பரவுவதில்லை. மாறாக நோயாளியுடன்

- உடலுறவில் ஈடுபடுதல்

- குருதி மாற்றீடு (Blood Transfusion)

- நோயாளி பாவித்த ஊசிகளை மற்றவரும் பாவித்தல் (Sharing Injetion Needle)

- தாய்ப்பால் மூலமாக குழந்தைகளுக்கு

- பிரசவ நிலைமை

போன்ற காரணங்களால்தான் பரவ முடியும்.உங்களுக்கு சந்தேகம் அதிகமாக இருந்தால் பின்வரும் பரிசோதனையைச் செய்து பாருங்கள்.

HIV I & II Andibodies Test

**கேள்வி:**

எனது மகனுக்கு 4 வயது ஆகிறது. கூடுதலாக நகம் கடித்தல், ஏனைய பிள்ளைகளுடன் பழகுவதில்லை, தனிமையாக இருக்கிறான். இது என்ன நோயா?

(பரீதா, வாழைச்சேனை)

★ இது உளவியல் சம்பந்தமான பிரச்சினையாகும்.அடுத்தடுத்து வரும் வாரங்களில் நவமணியைப் பார்க்கவும். உளவளத் துணையாளரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளுங்கள்.

### ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்

# ஆசிரியர்களை உள்ளே போக விடாது குச்சவெளியில் மாணவர் போராட்டம்





(கந்தளாய்- எப்.முபாரக்)

திருகோணமலை, குச்சவெளி பிரதேசத்திலுள்ள மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று காலை அந்நூரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதான கதவை மூடி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி, கடந்த 03ஆம் திகதி அந்நூரியா முஸ்லிம் மகா வித்தியாலயம், அந்நூரியா கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் இலந்தைக்குளம் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 1000ற்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து, 10ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், திருகோணமலை வலய கல்விப் பணிப்பாளர், குச்சவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கூட்டாகச் சேர்ந்து கலந்துரையாடலொன்றை மேற்கொண்டனர்.

அக்கலந்துரையாடலில் கடந்த 16 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டும் இன்று வரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என மாணவர்கள் தெரிவித்தனர். தமது பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்காவிட்டால் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களை உள்ளே விடமாட்டோம் எனத் தெரிவித்து பாடசாலையின் பிரதான கதவை பூட்டி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.





நாச்சியாதீவு மக்தபுல் ஹசனிய்யாவின் முதலாம் வருட பரிசளிப்பு விழா நாச்சியாதீவு மொஹிதீன் ஜும்ஆ பள்ளிவாயல் தலைவர் சி.அமீரான் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் மக்தப்பிரிவின் கண்காணிப்பாளர் அஷ்ஷெய்க் ஹனீபா நியாஜ், நாச்சியாதீவு மக்தப் பிரிவின் தலைவர் நாச்சியாதீவு பர்வீன், மக்தப் பிரிவின் அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். நாச்சியாத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாணவியொருவருக்க பரிசு வழங்குவதனையும் படத்தில் காணலாம்.

# ஏழைகளின் சிறு உழைப்பை சாராயக் கடைக்காரர்கள் சுருட்டிக் கொள்கின்றார்கள்

### பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி







(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஏழைகளின் சிறு உழைப்பை சாராயக் கடைக்காரர்கள் சுருட்டிக்கொண்டு போகின்றார்கள். ஆனால், இனத்துவேசம் காட்டி கொக்கரிக்கும் எந்த அரசியல்வாதியும் இதனைக் கண்டுகொள்வதில்லை என கிராமிய பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

அமீரலியின் நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொம்மாதுறைக் கிராமத்தில் சுமார் எட்டரை மில்லியன் ரூபா செலவில் மக்கள் போக்குவரத்துக்காக புனரமைக்கப்பட்ட பாலத்தை மக்கள் பாவனைக்காக ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தும்போதும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும்போதும் நான் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்று ஒருபோதும் பாகுபாடு காட்டி பிரித்துப் பார்ப்பதில்லை.

எங்கு பிரச்சினைகள் உள்ளதோ அது தீர்த்து வைக்கப்பட வேண்டும், எந்த மக்களுக்குத் தேவைகள் உள்ளதோ அது நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டும். இதுவே எனது கொள்கை.

வாக்குப் பெறுவதற்காக நான் முதலீடு செய்வதில்லை. இறைவன் எனக்குத் தந்திருக்கின்ற அறிவு, ஆரோக்கியம், மற்றும் அரசியல் பலத்தைக்கொண்டு எந்த சமூக மக்களுக்காயினும் சேவை செய்துவிட்டுப் போக வேண்டும் என்பதே எனது அவா. நான் தேர்தல் காலங்களிலும் தேர்தல் நடைபெறாத வேளைகளிலும் ஒரே மாதிரியாகத்தான் பேசுவேன். தமிழ் மக்கள் மத்தியிலும், முஸ்லிம் மக்களிடத்திலும் சிங்கள சமூகத்திடமும் ஒரே மாதிரியாகத்தான் பேசுவேன்.

இடத்துக்கிடம் நேரத்துக்கு நேரம் சமூகத்துக்குச் சமூகம் நான் ஒருபோதும் மாற்றி மாற்றிப் பேசியது கிடையாது.

இந்த மாவட்டத்திலே தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்ற பேதங்களை இனியும் வளர்ப்பதற்கு இப்பொழுது இருக்கின்ற இளைஞர் சமுதாயம் இனியும் இடமளிக்க மாட்டார்கள் என்கின்ற அசையாத நம்பிக்கை எனக்குண்டு.

இந்த மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர் ஒரு முஸ்லிமா, தமிழரா அல்லது சிங்களவரா என்பது கிடையாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வேண்டும் என்பதில் உறுதியுடன் செயற்படுபவர்கள் நாங்கள் - என்றார்.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சரின் இணைப்பாளர் என். ரவி உட்பட ஊர்ப் பிரமுகர்கள், கிராம மக்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.





சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் பிரதேசவாசிகள் பங்களிப்புடன் உக்குவளை மாருகோன முஸ்லிம் மையவாடிக்குச் செல்லும் பாதையின் ஒரு பகுதி சீமெந்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரன்ஜித் அலுவிஹாரவினால் திறந்துவைக்கப்பட்ட இந் நிகழ்வில் அமைப்பாளருடன் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம் இப்ராஹிம் உட்பட பிரதேச பிரமுகர்கள் பலரும் கலந்துரையாடுவதைப்படத்தில் காணலாம். (உக்குவளை நிருபர்)






கொத்மலை தேர்தல் தொகுதியிலுள்ள பஹலகொரக்கோய அல் அரபா முஸ்லிம் வித்தியாலயம் அதன் வெள்ளிவிழாவினைக் கொண்டாடுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனையொட்டிய கவனயீர்ப்பு பேரணியொன்று நாவலப்பிட்டிய நகரிலிருந்து ஹபுகஸ்தலாவை வரை இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். (ஹபுகஸ்தலாவை இப்றாஹீம்)

# கிழக்கு மாகாண சபை அமர்வு அறிக்கைகள் பொதுமக்களின் பார்வைக்காக வழங்கப்படும்

### சபை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான முகாமைத்துவ உதவியாளர்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாண சபை அமர்வு அறிக்கைகள் முதன்முறையாக பொதுமக்களின் பார்வைக்காக தமிழ், சிங்கள மொழிகளில் தொகுக்கப்பட்டு கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி மன்ற நூலகங்களுக்கும் அனுப்பப்பட்டு வருவதாக சபை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான முகாமைத்துவ உதவியாளர் ஜே. ஷர்மிலா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை அமர்வுகளில் இடம்பெறுகின்ற விவாதங்கள், அங்கு எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள், உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் பிரேரணைகள் உள்ளிட்டவை மக்களது பார்வைக்குக் கிட்ட வேண்டும் என்ற முதலமைச்சரின் ஆலோசனைக்கமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையின் மூலம் கிழக்கு மாகாண சபையில் என்ன நடைபெறுகிறது என்பதை மக்கள் வெளிப்படையாக அறிந்து கொள்ள வழியேற்படும் என்றும் அவர் கூறினார்.

இதன்படி கடந்த ஜனவரி மாத சபை அமர்வுகளில் இடம்பெற்ற விடயங்கள் தமிழ், சிங்கள மொழிகளில் தொகுக்கப்பட்டு இந்த வாரம் முதல் கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அவற்றின் பராமரிப்பிலுள்ள நூலகங்களில் பொது மக்களின் பார்வைக்கு வைப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களில் மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று ஆகியவை மாநகர சபைகளாகவும், திருகோணமலை, கிண்ணியா, ஏறாவூர், காத்தான்குடி, அம்பாறை ஆகியவை நகர சபைகளாகவும் ஏனைய 37 உள்ளூராட்சி மன்றங்கள் பிரதேச சபைகளாகவும் உள்ளன.

இவற்றில் திருகோணமலை மாவட்டத்தில் 5 பிரதேசசபைகளும், அம்பாறை மாவட்டத்தில் 8 பிரதேச சபைகளும் தனிச் சிங்கள மொழிமூல நிருவாகத்திற்குட்பட்டவை. அதேவேளை ஏனைய 32 உள்ளூராட்சி நிருவாக சபைகளில் 90 விதமானவை தனித் தமிழ் மொழிமூல நிருவாகத்திலும் மீதமுள்ள 10 விதமானவை சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிக் கலப்பு நிருவாகத்திற்குட்பட்டவையாகும் என்றார்.

# நிந்தவூரில் மதிலை உடைத்த ஆட்டோ மயிரிழையில் மாணவர்கள் உயிர்தப்பினர்



(நிந்தவூர் - சுலைமான் றாபி)

நிந்தவூர் 06ம் பிரிவு APC வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் முச்சக்கர வண்டியொன்று தனது கட்டுப்பாட்டினையிழந்ததையடுத்து முன்னே இருந்த மதிலை உடைத்து மோதுண்டது. இதில் ஆட்டோ சாரதியான நிந்தவூரைச்சேர்ந்த கே. மாசிலாமணி சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

மேலும் விபத்துக்குள்ளான இடமானது நிந்தவூர் அறபா வித்தியாலயத்திற்கு முன்னால் அமைந்துள்ள பிரதேசமாகவும், காலை 7.30க்குப் பிறகே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதால் இவ்வீதியினூடாக பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறிப்பிட்ட சாரதியும் அவரின் ஆட்டோவும் கடந்த 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08ம் திகதி நிந்தவூர் பிரதான வீதியில் தனது கட்டுப்பாட்டினையிழந்தமையினால் இதே போன்றதொரு விபத்தினை சந்தித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனை சாஹிராவில் 80% உயர்தரத்துக்குத் தெரிவு



(சாய்ந்தமருது எம்.எஸ்.எம்.சாஹிர்)

தற்போது வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப்பெறு பேற்றின் அடிப்படையில் கல்முனை சாஹிரா தேசியப் பாடசாலை மாணவர்கள் ஏ.ஆர்.எம். அப்ரார், ஐ.எம்.இல்ஹாம் அல் - ஹக், ஏ.எம். முஹம்மட் ஆதில், எம்.ஆர்.ஆசிக், யு.எல்.எம்.ஆப்ரித் ஆகிய 5 மாணவர்களும் ஆங்கில மொழி மூலமாக ஏ. அஹமட் சிபி என்ற மாணவனும் 9 பாடங்களிலும் (ஏ) அதி விசேட சித்தி பெற்றுள்ளதாக பாடசாலையின் உதவி அதிபர் எம்.எஸ்.அலிக்கான் நவமணிக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

11 மாணவர்கள் 8 (ஏ) சித்தியும் 10 மாணவர்கள் 7 (ஏ) சித்தியும் 12 மாணவர்கள் 6 (ஏ) சித்தியும் பெற்றதுடன் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து இம்முறை 80 சதவீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் உயர்தரப் பிரிவுகளான விஞ்ஞான, கணித, வர்த்தக, கலைப் பிரிவுகளுக்கு கல்வி கற்க தகுதி பெற்றுள்ளனர். என்றும் தெரிவித்தார்.

# மாத்தளை மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகள் 1022 பேர்

(வஹக்கோட்டை நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் 5 பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொண்ட ஆய்வின் படி 1022 சிறுநீரக நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட வைத்திய பணிப்பாளர் பீ.எம் விஜேகோன் தெரிவித்தார். வில்கமுவ,லக்கல பன்னேகம, நாவுல கலேவெல தம்புள்ள ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி கூடுதலான நோயாளிகளான 880 பேர் லக்கல,வில்கமுவ பகுதிகளிலும் கலேவெலயில் 96 பேரும் தம்புள்ளவில் 12 பேரும் நாவுலவில் 34 பேரும் உள்ளதாக தெரியவந்துள்ளது. 10 வயதுக்கு மேற்பட்ட 180,000 பேர்களின் இரத்த பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் 47 மில்லியன் ரூபா செலவில் தம்புள்ள வைத்தியசாலையில் சிறுநீரக பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாகூர் கனிக்கு அஸ்வர் வாழ்த்து



(எம்.எஸ்.எம்.சாஹிர்)

இலங்கையின் பிரபல எழுத்தாளர் காதிபுல் ஹக் எஸ்.ஐ. நாகூர் கனிக்கு அண்மையில் அவுஸ்ரேலியாவில் இயங்கும் பிரபல அக்கினிக்குஞ்சு இணையத்தளத்தினால் நடாத்திய உலகளாவிய சிறுகதைப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றதனையிட்டு முன்னாள் முஸ்லிம் கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

எழுத்துத்துறையில் பல சாதனை புரிந்துள்ள அவருடைய திறமையைப் பார்த்துத்தான் ஹாதிபுல் ஹக் என்ற அவருடைய திறமையைப் பார்த்துதான் காத்திபுல் ஹக் என்ற பட்டத்தை முஸ்லிம் கலாசார அமைச்சராக இருக்கும் போது ''வாழும் போதே வாழ்த்துவோம்'' என்ற தொனிப் பொருளில் அவரைக் கௌரவித்தேன் என்பதை மீட்டிப் பார்க்க விரும்புகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# சந்திரகாந்தன், சிசிலியாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் செலிங்கோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொதலாவலவின் மனைவி சிசிலியா கொதலாவல ஆகியோருக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

பிள்ளையான் உட்பட அவரது சகாக்கள் நான்கு பேரையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். கணேசராசா, நேற்று உத்தரவிட்டார்.

இந்த உத்தரவின்படி சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான 'பிரதீப் மாஸ்டர்' என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, 'கஜன் மாமா' எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வு உத்தியோகஸ்தர் எம். கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த 2015.10.11 அன்று சிவநேசதுரை சந்திரகாந்தனைக் கைதுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு செலிங்கோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொதலாவலவின் மனைவி சிசிலியா கொதலாவலவை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது. நிதி மோசடி குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




பொலன்னறுவை மாவட்டத்தில் பின்தங்கியபிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் மழைகாலங்களில் டெங்கு பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்வி வலய மட்டத்தில் சிங்கள மற்றும் தமிழ்மொழி மூல பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு சிரமான நிகழ்வுகள் விடுமுறை நாட்களில் அதிபர்களின் தலைமையில் இடம்பெற்றுவருகின்றது. மாணவர்கள் கிராமங்கள் ஊர்வலமாக சென்று டெங்கு ஒழிப்பு தெளிவூட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றுகிறது. பொ/ நுககஹதென்ன முஸ்லிம் வித்தியால மாணவர்கள் ஊர்வலமாக சென்று மக்களுக்கு தெளிவூட்டுவதையும் பெற்றோர்கள் மகளிர் அமைப்புக்கள் இணைந்து பாடசாலை தோட்டத்தில் சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

(பொலன்னறுவை நிருபர்)

# நீச்சல் தடாகத்தினை திறந்துவைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பெற்றோர்கள் வேண்டுகோள்

(அக்கரைப்பற்று விசேட நிருபர்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யின் நீச்சல் தடாகத்தினை திறந்துவைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவத்திடம், பெற்றோர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இப் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தினை அண்மையில் ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி ஆகியோர் கலந்து கொண்டு திறந்துவைக்கவிருந்தபோதிலும் அவை இறுதி நேரத்தில் தடைப்பட்டது. தற்போது பாடசாலையில் செயற்பட்டுவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் காலம் இன்னும் ஒரிரு தினங்களில் முடிவுற இருக்கும்நேரத்தில் இப் பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கொண்டு திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்கள்.

எனவே இன் நடவடிக்கையினை நிறுத்தி, விளையாட்டுத்துறை அமைச்சரைக் கொண்டு பாடசாலை நீச்சல் தடாகத்தினை திறப்பதற்கு உடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவத்திடம் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


## பெயர் மாற்றம்

பாத்ததும்பறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம அதிகாரி பிரிவு இலக்கம் 637, மடவள மடிகே, இல 26 /1, கோங்காமதொட்டுவ, மடவள பஸாரில் வசிக்கும் கீழ் குறிப்பிடுவர்களாகிய நாம் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி தமது பெயர்களைப் பின்வருமாறு மாற்றிக் கொண்டோம் என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றோம். இனிவரும் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவோம் என்பதையும் அறியத் தருகின்றோம்.

(Bc 88441) எம். கணேஷன் - எம். நதீர்

(Bc 15138) சத்திய பிரியா - பாத்திமா ஷிபா

(Bc 81085) மதூஷிகா - பாத்திமா திக்ரா


# அரசியல் அமைப்பு சட்ட மாற்றம்

## 1972ம் ஆண்டிய குடியரசு யாப்பினை தயாரிப்பதற்கு அரசியல் நிர்ணய சபை ஏன் தேவைப்பட்டது?

**பாகம் -04**

★ வை.எல்.எஸ். ஹமீட்



**பாகம் 04 தொடர்ச்சி...**

அவ்வாறு செய்கின்ற பொழுது சட்டத் தொடர்பில் (Break in Legal Continuity) முறிவு ஏற்படும்.

இதற்கு ஒரு மாற்று உபாயம் தேவை. அந்த உபாயம்தான் அரசியல் நிர்ணய சபை ஆகும். தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்றம் செல்லும் பொழுது இருக்கின்ற அரசியல் யாப்பிற்கு கட்டுப்பட்டுத்தான் அப்பாராளுமன்றத்திற்குள் இயங்க முடியும். எனவே இருக்கின்ற யாப்பின் அடிப்படையில் இயங்கும் பாராளுமன்றத்திற்குள் இருந்து கொண்டு அந்த யாப்பை புறந்தள்ளி அந்த யாப்பிற்கு முரணாக புதிய யாப்பை வரைய முடியாது. எனவே சட்டத் தொடர்பில் முறிவை ஏற்படுத்துவதற்காக அரசியல் நிர்ணய சபை தேவைப்படுகின்றது.

அதே நேரம் இந்த அரசியல் நிர்ணய சபையினை ஏன் சட்டவிரோதமானது மற்றும் புரட்சிகரமானது என அழைக்கப்படுகின்றது என்றால் இருக்கின்ற யாப்பையும் பாராளுமன்றத்தையும் புறம் தள்ளி அதன் பணியை 'தான்' செய்வதனாலாகும். இந்நிலையில் 1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் வீழ்த்தப்பட்டு 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

பிரதமர் டட்லி சேனநாயக்க முன்னாள் பிரதமர் பண்டார நாயக்க செய்த அதே பாணியில் கூட்டுத் தெரிவுக் குழுவினை நிறுவினார். இத்தெரிவுக்குழுவின் நோக்கமும் இருக்கின்ற யாப்பை திருத்துவதன் மூலம் குடியரசாவதே தவிர புதிய யாப்பை வரைவதல்ல. ஆனால் எதிர் கட்சிகள் (ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உட்பட ) அத்தெரிவுக்குழுவில் பங்குபற்ற மறுத்துவிட்டன. காரணம் அரசியல் நிர்ணய சபையினூடாக புதிய யாப்பு வேண்டும் என்பது அவர்களுடைய நிலைப்பாடாக இருந்தது. எதிர்க்கட்சிகள் மீண்டும் பிரிவு கவுன்சிலின் சிறுபான்மைகள் தொடர்பான சரத்து 29 (2) தொடர்பான தீர்ப்பினை புதிய யாப்பு தேவைக்கான தமது பிரதான நியாயமாக காட்டியது.

அரசியல் நிர்ணய சபையின் தத்துவம்

அரசியல் நிர்ணய சபையினை ஆதரிக்கின்றவர்கள் அதற்கான அதிகாரம் மக்களிடமிருந்து நேரடியாக கிடைக்கின்றது என்று வாதிடுகின்றார்கள். ஏனெனில் பொதுத்தேர்தலில் அரசியல் நிர்ணய சபையினை அமைக்க உத்தேசித்துள்ள கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதற்கான ஆணையை மக்களிடம் கோருகின்றது. அக்கட்சி அந்நேரத்தில் வெற்றி பெற்றால் அரசியல் நிர்ணய சபைக்கு மக்கள் ஆணை தந்திருப்பதாகவும் அம்மக்களின் அதிகாரத்தினை கொண்டு புதிய யாப்பினை வரைவதாகவும் அவ்வாறு வரைகின்ற யாப்பு மக்களுக்காக மக்களால்தயாரிக்கப்பட்ட யாப்பு எனவும் வியாக்கியானம்கூறுகின்றார்கள்.

(பாகம் 5 தொடரும்..)


## பெயர் மாற்றம்

திருகோணமலை தண்டாக்குளம் சம்பா லேன் 728 இலட்சத்தில் வசிக்கும் கார்த்திகேசன் வினோத் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 910734873O) ஆகிய நான் புனித இஸ்லாத்தைத் தழுவி எனது பெயரை முஹம்மத் இர்சாத் என மாற்றம் செய்துள்ளேன். என்பதனை இத்தால் முழு நாட்டுக்கும் அறியத்தருகிறேன்.

- முஹம்மத் இர்சாத்

## நாகூர் நிகாஹ் சேவை

உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித்தருவதற்கு எம்மை நாடவும். உண்மையான 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர். M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.) T.P : 077 2810009. Email - nrahmathullah786@yahoo.com



# மசாஜ் நிலையங்கள் மீது கட்டுப்பாடு

மசாஜ் நிலையங்களை கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டமூலம் கொண்டு வரப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

மசாஜ் நிலையங்களை சோதனையிடுவது தொடர்பில் பிரச்சினைகள் இருப்பதால், புதிய சட்டமூலத்தை கொண்டு வரவுள்ளதாக சுகாதார சேவைகள் பிரிவு தெரிவித்தது.

குறித்த சட்டமூலம் தொடர்பான வரைவு சட்ட வரைவு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், குறுகிய காலத்திற்குள் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர், மசாஜ் நிலையங்களை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் பிரிவு தெரிவித்தது.

# உக்குவளை பிர்தௌஸ் மௌலவிக்கு கௌரவம்



(உக்குவளை நிருபர்)

ஜமியத்துல் உலமாச் சபையின் ஏற்பாட்டில் சிரேஷ்ட உலமாக்கள் பலர் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். இவர் உக்குவளையை சேர்ந்த அஷ் ஷெய்க் மௌலவி ஏ.எஸ்.பிர்தௌஸ் (கியாஸி) நினைவுச்சின்னமும் பணமுடிப்பும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மாத்தளை மாவட்டத்தின் லக்கல, பன்னேகம,குரிவெல, நாகொல்ல ஆகிய பகுதிகளின் சிங்களப்பாடசாலைகளில் சிங்கள மொழியில் கற்றுத்தேறிய பின்பு மாதம்பை காலி ஆகிய பகுதிகளின் அரபுக்கல்லூரிகளிலும் மார்க்க கல்வியும்கற்று மௌலவி பட்டம் பெற்று வெளியேறிய இவர் பல்வேறு மஸ்ஜிதுகளிலும்பிரதம கதீபாகக் கடமையாற்றியவர்.

சர்வமத விவகாரங்களில் அவ்வவ்போது கலந்து கொண்டு மத இன ஐக்கியத்திற்காகவும் சகல சமூக சமாதானத்திற்காகவும் மற்றும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும் பங்களிப்பு நல்கி வரும் இவருக்கு 2015ல் பரகஹவெல அரபுக்கல்லூரியில் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். இவர் உக்குவளை பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளராகவும் சமாதான நீதவானாகவும் தற்போது பணியாற்றி வருகிறார்.



பலாகல கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டியில் 19 வயதின் கீழ் ஆண்களுக்கான போட்டியில் வெற்றி பெற்ற நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலய அணியினரை படத்தில் காணலாம்.

(படம்- கலாவெவ நிருபர்)

## கேகாலை மாவட்ட

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனக்கூட்டம் மாவனல்லையில்

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் கேகாலை மாவட்ட புனரமைப்புக்கூட்டம் 26 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9 மணியளவில் மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியில் நடைபெறும்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி பி.எம் பாரூக் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பொதுச்செயலாளர் எம். அஜ்வதீன் தேசிய அமைப்பாளர் ஏ.சி.ஏ.கபூர் சப்ரகமுவ மாகாணப் பணிப்பாளர் கலாநிதி ஏ.ஆர்.எம் கவுஸ் உட்பட தலைமையகத்தின் முக்கிய பிரதிநிதிகள் பலரும் அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

இந்நிகழ்வின் போது கேகாலை மாவட்ட சம்மேளனத்துக்கான நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படவுள்ளது மாவட்ட அமைப்பாளர் அஷ் ஷெய்க் எம்.எஸ்.எம். தாலிப் (நளிமி), எம்.கே.எம். லுக்மான் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில் கேகாலை மாவட்டத்திலுள்ள சகல தொகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் இதில் கலந்து கொள்ள விரும்புவோர் விபரங்களுக்கு 0779292872,077062757 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.


## கைத்தொழில் வணிக அமைச்சு
## லக்சல
## இலங்கை கைவினை சபை

LAKSALA
State Gift & Souvenir Boutique
All of Sri Lanka

## அலுவலகத்திற்கு இடம் தேவை

லக்சல அலுவலகங்கள் கொள்வனவு குத்தகைக்கான மற்றும் பண்டகசாலை தொகுதிக்கான கட்டடம் ஒன்று பின்வரும் விளக்கங்களுடன் முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகின்றது.

01. பிரதேசம் – 8000 சதுர அடி கொண்ட தரைத்தளத்துடன் குளிரூட்டப்பட்ட கட்டடம்.
02. அமைவிடம் – கொழும்பு 03, 04, 05, 07, 08
03. வாகன தரிப்பிடம் – குறைந்தது 10 வாகனங்களை தரிப்பிடச் செய்யும் வசதி
04. குத்தகைக்கான காலம் – 2 வருடங்கள் [புதுப்பிக்கக்கூடியது]
05. 3 அவத்தை மின்சார வசதி.
06. சுமார் 50 பேர் பயன்படுத்தக்கூடிய தனியான / பொதுவான கழுவும் அறை வசதிகள்.
07. போதிய கொள்ளளவுடன் உபயோகிக்கக்கூடிய ஜெனரேட்டர்.
08. ஜெனரேட்டர், குளிரூட்டி, மின் உயர்த்தி, ஏனைய இயந்திரங்களை காலத்துக்குக் காலம் கட்டட உரிமையாளரால் திருத்தங்களும் சேவைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

விண்ணப்பம் மற்றும் விலைமனு நிபந்தனைகளை கீழ்வரும் முகவரியில் 24.03.2016ம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 07.04.2016 பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுவினை பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். அல்லது கீழ்வரும் முகவரியுள்ள இடத்தில் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் வைப்புச் செய்யலாம்.

கடித உறையின் மேல் இடது புறத்தில்

Quotation for Lease of Building Space எனக் குறிப்பிடவும்.

08.04.2016ம் திகதி 3.00 மணிக்கு விலை மனுக்கள் திறக்கப்படும்.

**பணிப்பாளர் (மனிதவள நிர்வாகம்)**
**நிர்வாகப் பிரிவு**
**இலங்கை கைவினைஞர் சபை**
**215, பௌத்தாலோக மாவத்தை**
**கொழும்பு - 07**

**மேலதிக விபரங்களுக்கு**
**தொடர்பு கொள்க**
**பணிப்பாளர் (மனிதவள / நிர்வாகம்)**
**071 4521909, 011 2055717**

**தவிசாளர்**
**இலங்கை கைவினைஞர் சபை - லக்சல**

# பாக். மண்ணிலிருந்து தீவிரவாதத்தை முழுமையாக துடைத்தெறிவோம்

## தேசிய தினத்தில் நவாஸ் ஷெரிப் சூளுரை

பாகிஸ்தானின் 76ஆவது தேசிய தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் தீவிரவாதத்தை பாகிஸ்தான் மண்ணிலிருந்து முழுமையாக துடைத்தெறிவோம் என அந்நாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரிப் சூளுரைத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள தேசிய தின வாழ்த்துச் செய்தியில்,

"பாகிஸ்தானை உருவாக்கிய முகமது அலி ஜின்னாவின் கனவான அனைத்து தரப்பு மக்களுக்கும் சமஉரிமை, சமநீதி ஆகியவை நிலைநிறுத்தப்பட வேண்டும். நமது நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களையும் ஒருங்கிணைத்து, பாகிஸ்தானில் வாழும் அனைத்து மக்களையும் இந்த மண்ணின் சம உரிமை படைத்தவர்களாக மாற்றும் பணியில் நாம் வெற்றிகாண வேண்டும்.

அதற்கேற்ப, சிறுபான்மையின மக்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் செயல் திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தீவிரவாதம், பயங்கரவாதம் போன்ற அச்சுறுத்தல்களை இன்று நாம் எதிர்கொண்டு வருகிறோம். இந்த தீயசக்திகளை வீழ்த்த எனது தலைமையிலான அரசு சபதம் ஏற்றுள்ளது.

இந்த மண்ணில் இருந்து தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் முழுமையாக துடைத்தெறியப்படும் என குறிப்பிட்டுள்ளார்.



# ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு நிதியுதவி: 16 வயது ஆஸ்திரேலியப் பெண் கைது




ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு நிதியுதவியளிக்க முயன்றதாக அவுஸ்திரேலியாவில் 16 வயதுப் பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

அவருடன் அதே குற்றச்சாட்டின் பேரில் 20 வயது இளைஞன் ஒருவரும் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டார்.

இதுகுறித்து, நியூ சவுத் வேல்ஸ் மாகாண காவல்துறை துணை ஆணையர் கேதரீன் பர்ன் கூறியதாவது:

சிட்னி நகரின் "கில்டு ஃபோர்டு" புறநகர்ப் பகுதியில் 20 வயது இளைஞரும், 16 வயதுப் பெண்ணும் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்காக நிதி திரட்டி, அதனை வெளிநாடுகளுக்கு அனுப்ப முயன்றதாக அந்த இருவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்படவுள்ளது.

பதின்ம வயதுடைய பலர், ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் போக்கு மிகவும் கவலையளிப்பதாக உள்ளது என்றார் அவர்.

பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி அளிக்க முயன்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், 25 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.எஸ். பயங்கரவாத ஆதரவாளர்களால் அவுஸ்திரேலியாவில் பயங்கரவாதம் பரவாமல் தடுப்பதற்காக அந்த நாட்டு பாதுகாப்புத் துறை தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கடுமையாக்கும் வகையில் புதிய தேசியப் பாதுகாப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

கடந்த 2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இதுவரை 14 பேர் மீது பயங்கரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# வெளியுறவுத்துறை அமைச்சராக ஆங் சான் சூகி பொறுப்பேற்பு



மியன்மாரின் ஜனநாயகப் போராளியும் ஆளுங்கட்சித் தலைவருமான ஆங் சான் சூகி, அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்க இருப்பதாக அவரது கட்சி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. தேவையேற்படின், கூடுதல் பொறுப்புகளையும் அதிகாரத்தையும் சூகி பகிர்ந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக முறைப்படி கடந்த நவம்பர் 8ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அதில் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய கட்சி (என்.எல்.டி.) இரு சபைகளிலும் 80 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது.

மியான்மர் அரசியல் சட்டப்படி வெளிநாட்டை சேர்ந்தவரை திருமணம் செய்தவரோ, அவரின் குழந்தைகளோ நாட்டின் உயரிய பதவியை வகிக்கமுடியாது. சூகி இங்கிலாந்து நாட்டுக்காரரை திருமணம் செய்ததால் ஆங் சான் சூகி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது.

எனவே, அவர் தனது ஆதரவாளர்களும் நம்பிக்கைக்குரியவருமான ஹிதின் கியாவ் என்பவரை களம் இறக்கினார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிகமான எம்.பி.க்களின் ஆதரவுடன் சூகியின் ஆதரவு பெற்ற ஹிதின் கியாவ் மியன்மாரின் புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார்.

விரைவில் பதவியை ஏற்றுக் கொள்ளும் ஆளும்கட்சி தலைவரான ஆங் சான் சூகிக்கு மேலும் பல முக்கிய பொறுப்புகளும் வழங்கப்படலாம் என உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவருடன் மேலும் 17 அமைச்சர்கள் தலைமையிலான புதிய அமைச்சரவையின் பதவியேற்பு விழாவுக்கான அதிகாரப்பூர்வ திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# தமிழகத்தில் 5 முதல்வர் வேட்பாளர்கள்:

## அடுத்த அதிஷ்டம் யாருக்கு..?



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் இம்முறை கருணாநிதி, ஜெயலலிதா, விஜயகாந்த், அன்புமணி மற்றும் சீமான் என ஐந்து முதல்வர் வேட்பாளர்கள் களத்திலுள்ளனர். இது தி.மு.கவுக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது. ஆளும் கட்சி செய்யும் தவறுகளை முன்வைத்து, எதிர்க்கட்சியாக இருக்கும் தி.மு.க. வாக்குகளை அறுவடை செய்யலாம் என எதிர்பார்த்திருந்தது. ஆனால், ஈழப்பிரச்சினை, 2ஜி போன்றவற்றை முன்னிறுத்தி பிற பெரிய கட்சிகள் தி.மு.க. பக்கம் செல்லாமல் தவிர்த்துவந்தன. எனவேதான் விஜயகாந்த் மிகவும் அவசியமாக பார்க்கப்பட்டார்.

# கொடுமை அனுபவிப்பதாக பேஸ்புக்கில் வீடியோ பதிவு

## சவூதியில் இந்தியர் கைது



கர்நாடகாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சவூதி அரேபியாவில் தாம் கொடுமைக்கு ஆளானதாக கண்ணீர் மல்க பேசிய வீடியோ பேஸ்புக்கில் வெளியாக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அப்துல் சத்தார் என்ற இளைஞர் கர்நாடகாவின் உத்தர கன்னட மாவட்டத்தில் தண்டேலியை சேர்ந்தவர். இவர் சவூதியில் அல்கொபர் நகரில் 2014ஆம் ஆண்டு முதல் கட்டுமான நிறுவனம் ஒன்றில் ஓட்டுனராக பணியாற்றி வருகிறார். இவர் தனக்கு உதவி கேட்டு பேஸ்புக்கில் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளரால் தாம் கொடுமைக்கு ஆளாகி வருவதாக அப்துல் விவரித்துள்ளார்.

கடந்த 23 மாதங்களாக விடுமுறையே இல்லாமல் பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ள அவர், ஊதியமும் முறைப்படி தமக்கு அளிக்கப்படவில்லை என கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

வேலையிலிருந்து விலகி இந்தியா திரும்ப முடியாமல் கடவுச்சீட்டு மற்றும் பணி அனுமதி விசாவையும் கட்டுமான உரிமையாளர் பறிமுதல் செய்துள்ளதாக குற்றம்சாட்டியுள்ள அவர், இணையத்தளம் மூலம் தமக்கு உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த வீடியோவை பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அப்துலின் இந்த வீடியோவை உலகம் முழுவதுமுள்ள இலட்சக் கணக்கானோர் பார்த்துள்ளனர். பி.பி.சி. உள்ளிட்ட பிரபல சர்வதேச ஊடகங்களில் வீடியோ வெளியானதை தொடர்ந்து தவறான தகவல்களை பரப்பியதாக அப்துல் சத்தாரை சவூதி பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனிடையே அப்துலை மீட்டு இந்தியா அழைத்து வரும் முயற்சியில் டில்லியைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# இஸ்லாத்தில் பயங்கரவாதம் வன்முறைக்கு இடமில்லை:

## அது ஓர் அன்பு மதம் என்கிறார் ஷேக் ஹசீனா

இஸ்லாத்தில் பயங்கரவாதம் மற்றும் வன்முறைக்கு இடமில்லை என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

பங்கபந்து சர்வதேச கருத்தரங்கு மையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்:-

இஸ்லாத்தில் வன்முறை மற்றும் பயங்கரவாத செயல்களுக்கு ஒரு போதும் இடமில்லை. இது, மிகவும் அமைதியான, அன்பு மதம்.

இந்த மதத்தை அனைவரிடமும் பிரபலப்படுத்துவது, ஒவ்வொரு முஸ்லிம் மாணவரினதும் கடமையாகும்.

மாணவர்கள் அனைவரும், வன்முறை மற்றும் பயங்கரவாத செயல்களுக்கு அப்பாற்பட்டவர்களாக இருப்பதுடன் அத்தகைய போக்குகளுக்கு முடிவு கட்டவும் முன்வர வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் கடந்த சில மாதங்களாக சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கு, பெரும்பான்மையினராக உள்ள முஸ்லிம்கள் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், அவர்களிடம் அமைதியை கடைப்பிடித்து அனைத்துப் பிரிவினரிடமும் அன்பை வெளிப்படுத்த வலியுறுத்தும் விதமாக ஷேக் ஹசீனா இவ்வாறு உரையாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



## உலகச் செய்திகள்

# 100 குழந்தைகளை பெறுவதே எனது இலக்கு

## பாக். மருத்துவர் சபதம்

பாகிஸ்தானைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் "100 குழந்தைகளைப் பெறுவதே தமது இலக்கு" என்று சபதம் மேற்கொண்டுள்ளார்.

பலுசிஸ்தான் மாகாணத் தலைநகர் குவெட்டாவைச் சேர்ந்தவர் 43 வயதுடைய ஜோன் முகமது ஒரு வைத்தியராவார். மூன்று மனைவிகள், 21 மகள்கள், 14 மகன்களுடன் ஒற்றுமையுடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்.

கடந்த வாரத்தில்தான் இவரது இரண்டாவது மற்றும் மூன்றாவது மனைவிகள் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர்.


முடியுமானால், நான்காவது முறையாக திருமணம் செய்து 100 குழந்தைகளை பெறுவதே தனது இலக்கு என்று ஜோன் முகமது சபதமெடுத்துள்ளார். மாதத்துக்கு ரூ. 1 இலட்சம் சம்பாதிக்கும் இவர், தனது குடும்பப் பராமரிப்பு செலவுகளுக்கு இந்தத் தொகை போதுமானதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

கல்வி இன்றி வாழ்க்கை இல்லை என்பதை உறுதியாக நம்பும் அவர், தன்னுடைய மகன்கள் மற்றும் மகள்களுக்கு தரமான கல்வியை வழங்குவதே தனது இலட்சியம் என்றும் கூறியுள்ளார்.

ஒரு குழந்தையைப் பெற்று வளர்ப்பதே பெரும்பாடு என்று புலம்பும் பெற்றோர்களுக்கு ஜோன் முகமது சிம்ம சொப்பனம்தான்.

இவரைப்பற்றிய விடியோ முகநூலில் (பேஸ்புக்) வெளியானவுடன் அதனை 33 இலட்சம் பேர் பார்த்துள்ளனர். அந்த விடியோ 1.75 இலட்சம் முறை பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதுடன் 4,000இற்கும் மேற்பட்ட 'கொமெண்டுகளை' அள்ளியுள்ளது.



கடற்கரை (பேருவளை) — சப்ராஸ் பாரூக்




ஏறும்புகள் (கண்டி) — அஹமட் நதா



மாலைநேரம் (கொழும்பு) — விதுஷியா

# முஸ்லிம்கள் ஒருபோதும் தனியலகு கேட்கவில்லை





1948ஆம் ஆண்டு முதல் அதாவது, பிரித்தானியர் காலத்திலிருந்து முஸ்லிம்கள் இந்நாட்டின் அனைத்து ஆட்சியாளர்களினாலும் கௌரவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று முஸ்லிம்களும் அனைத்து ஆட்சியாளர்களுடனும் இந்நாட்டின் சுபீட்சத்துக்காக தங்களால் முடியுமான பங்களிப்பினை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

ஏனெனில், 1986ஆம் ஆண்டிற்கு முதல் முஸ்லிம்கள் தனியான அலகொன்றினை பெறுவதற்கான எந்த விதமான தேவைகளையும் உணரும் வகையில் கடந்த ஆட்சியாளர்கள் முஸ்லிம் சமூகத்தினை பார்க்கவில்லை. ஆனால் 1986ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்நாட்டின் முதற் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் வடகிழக்கினை இணைத்து பிரகடனம் ஒன்றினை மேற்கொண்ட போதே முஸ்லிம்களுக்கென தனியான மாகாணத்தின் அல்லது நிருவாக அலகின் தேவை உணரப்பட்டது என்பதுவே நிதர்சனமாகும்.

மேற்கூறப்பட்ட அந்த விடயத்தைப் பொறுத்த வரை, மாகாண அமைப்பை பொறுத்த வகையில் வடமாகாணம் எவ்வாறு தமிழ் மக்களுக்கான மாகாண சபையாக அமையப்பெறுகின்றதோ, அதே போன்று கிழக்கு மாகாணம் முஸ்லிம்களுக்கான சபையாகவே அமையப் பெறுகின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் இரண்டு மாகாணங்களும் இணையும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் அங்கும் சிறுபான்மையினராகி, இலங்கையில் ஒரு வதிவிடமற்ற, ஒரு அலகினை எல்லைப்படுத்த முடியாதவர்களாகவே பார்க்கப்படுகின்றனர்.

இதனடிப்படையில் எமது முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் இணைந்த வடகிழக்கில் தான் முஸ்லிம்களுக்கான ஒரு தென்கிழக்கு அலகின் முக்கியத்துவத்தினை முன் கொண்டு வந்தார். எனினும் அவ்வெண்ணப்பாடானது இச்சிறிய நாட்டினை கூறுபோடும் சிந்தனையல்ல, மாறாக நாட்டின் நிர்வாக கூறுபோடப்படும்போது இந்நாட்டின் முஸ்லிம்களின் தனித்துவம், உரிமைகள், அபிலாசைகளை பெற்றுக் கொள்வதற்கான ஒரு உரிமையாகவே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மாறாக வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டதன் பின்னர் இந்நாட்டின் முஸ்லிம்களுக்கென ஒரு தனியான ஒரு அலகின் தேவை என்பது அவசியமற்றதாகவே பார்க்க முடிகின்றது. ஏனெனில், கிழக்கு மாகாணம் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதால் நிச்சயமாக அந்த மாகாண நிர்வாகம் முஸ்லிம்களின் நிர்வாகத்தின் கீழ் வருவதென்பது எதார்த்தமானதாகும்.

இருப்பினும் கடந்த இரண்டு மாகாண சபைகளிலும் கிழக்கு மாகாண சபை முஸ்லிம்களின் மொத்த நிருவாகத்திலிருந்து சற்று தடம்புரளச் சென்றதென்பது ஒரு சில முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்களின் வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடன்றி வேறில்லை.

காரணம் 1986ஆம் ஆண்டு மர்ஹூம் அஷ்ரப் ஒரு பாரிய இலக்கினை மையப்படுத்தியதாகவே முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியினை ஸ்தாபித்தார்கள். அதற்காக பல வழிகளிலும் பல முறைமையிலும் இந்நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களினதும், தலைமைத்துவத்தினாலும் அவர்களின் உதிரத்தினை நீராய் ஊற்றி இக் கட்சி வளர்த்தெடுக்கப்பட்டது, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பினர் நடாத்திய முஸ்லிம்கள் மீதான கோரத்தாண்டவத்துக்கு மத்தியிலும், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இலக்கினை நோக்கி பயணித்த இந்தக் கட்சியும், தலைமையும் இறைவன் உதவியாலும், தலைமைத்துவத்தின் சாணக்கியத்தாலும் 8 வருட உழைப்பின் பின்னர் 1994ஆம் ஆண்டில் தலைமைத்துவம் இந்நாட்டின் சில அடைவுகளை அடைந்தது.

1999ஆம் ஆண்டில் தலைமைத்துவம், இந்நாட்டில் முஸ்லிம்கள் என்ற தனியான போக்கு எம்மையும் எமது மக்களையும் இனவாதிகளாக்கிவிடலாம் என்ற நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பாக தேசிய ஐக்கிய முன்னணி எனும், ஒரு கட்சி ஒரு இனத்தினை மாத்திரம் வரையறுக்காத அனைத்து இனங்களையும் உள்வாங்கும் வகையில் அமையத்தக்கதாக ஆரம்பித்தார். தொடர்ந்து அதனூடாக பயணம் செய்து கொண்டிருந்த தலைவர் இறைவனின் நாட்டப்படி இறையடி சேர்ந்தார்.

இதன்பின்னர், புதிய தலைமைத்துவத்தால் ஸ்தாபகத் தலைவரின் இலக்குகள் சுக்கு நூறாக்கப்பட்டு கற்களும், முற்களும் நிறைந்த பாதையில் சந்தர்ப்பவாத அரசியலினூடாக புதிய பயணம் சென்று கொண்டிருப்பதே தற்போதைய முஸ்லிம் சமூகத்தின் இதுபோன்ற பாரிய இழப்புகளுக்கு காரணமாக அமைந்து கொண்டிருக்கின்றது என்பதுவே நடப்பின் உண்மை நிலையாகும்.

இதற்காக தலைமைத்துவம் வட, கிழக்கில் வாழும் பாதிக்கப்பட்ட மற்றும் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லீம்களின் உரிமைகளுக்காகவோ அல்லது அபிலாசைகளுக்காகவோ போராடவில்லை, வெறும் அமைச்சுப்பதவி மோகத்திற்காக வங்குரோத்து அரசியலை செய்வதற்கான ஒரு கட்சியாகவே இதனை பயன்படுத்துகின்றது என்பதனை பல வரலாற்று உண்மைகளின் மூலம் எம்மால் நிரூபிக்க முடியும். உதாரணமாக தலைமைத்துவத்தினை பொறுப்பேற்றது முதல் இன்றுவரையும் நான்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளை பெற்றிருந்தும் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்கு கிடைத்த பயன் என்ன?

ஆனால் 1994ஆம் ஆண்டு மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அன்றைய அரசாங்கத்திடம் பேரம்பேசி பெற்றுக்கொண்ட அமைச்சினை வைத்து எமது சமூகத்தினால் உணரப்பட்ட மிகப்பாரிய தேவைகளை நிவர்த்தி செய்த வரலாற்றினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதன் உண்மையினை எம்மால் மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

எனவே, இந்த அழகிய திருநாட்டில் வாழும் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களோடு இணைந்து செயற்படுவதன் மூலம் மாத்திரமே இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இனமாகிய எமது உரிமைகள், அபிலாசைகள் மற்றும் ஏனைய தேவைகளையும் மிக இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் என்பதுவே மிகச் சரியான பாதையாகும் என நாம் கருதுகின்றோம்.

அதன் அடிப்படையில்தான் இன்றைய முஸ்லிம் சமூகம் முகம்கொடுக்கும் சவால்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தன்னை அர்ப்பணித்து, ஒட்டுமொத்த இலங்கை வாழ் முஸ்லிம்களின் கல்வி, பொருளாதாரம், கலாசார மற்றும் பண்பாட்டு விழுமிய ரீதியிலான விடயங்களுக்கான சரியான திட்டமிடலின் மூலம் அரசோடு இணைந்து தீர்வுகளைக் காண்பதற்காக செயற்பட்டு வந்து கொண்டிருக்கின்ற ஒரு இளம் விவேகமான தலைவனாக விளங்கிக் கொண்டிருக்கின்ற அ.இ.ம.கா. தலைவரின் பாதை மற்றும் கருத்துக்கள் எமது ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் கருத்துகளுக்கு நிகரானதாக அமைந்து வருவதனை யாராலும் மறுக்க முடியாது.

ஆகவே, இலங்கையில் வாழும் ஒட்டு மொத்த முஸ்லிம் களின் நலனிலும் பங்கு கொள்ளும் ஒரு சிறந்த கட்சியினாலும் வினைத்திறன் மிக்க ஒரு தலைமைத்துவத்தினாலும் மாத்திரமே ஆட்சியாளர்களோடு இணைந்து எமது ஸ்தாபகத்தலைவரின் இலக்குகளை அடைந்து கொள்ளமுடியும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தனியான அலகினை பெறுவது, இச்சிறிய நாட்டினை சிறு சிறு சமூக விரோதிகளின் செயற்பாடுகளுக்காக கூறுபோட முற்படபடுவது, முஸ்லிம்களின் தேவையோ, இலக்குகளோ அல்ல. எனவே, இந்நாட்டின் அரசியலமைப்பில் சுயநலம், பேராசை மற்றும் காழ்ப்புணர்வுகளை முஸ்லிம் அரசியல் தலைமைகள் மறந்து எமது மக்களுக்காக சென்ற ஆட்சியாளர்களினால் வழங்கப்பட்ட உரிமையையும் தக்கவைத்துக்கொண்டு இந்நாட்டின் ஆட்சியாளர்களால் தீர்வுகள், ஆலோசனைகள் பற்றி பேசும் மேசைகளில் முஸ்லிம்களுக்கென தனியான தரப்பு ஆசனங்களை ஒதுக்க சந்தர்ப்பங்களை உருவாக்க பரிந்துரைகளைச் செய்ய முன் வருவதே இந்நாட்டு முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையும் என்பது இன்றியமையாத தேவையாகும்.

**★ எம். எம். நௌசாட், சம்மாந்துறை**

## தெஹிவளை மரணங்கள் ஏப்ரல் 26இல் வழக்கு

தெஹிவளை, கவுடான வீதி ஹுஸைன் மௌலானா உட்பட்ட நால்வரின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை ஏப்ரல் 26ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

குறித்த மரணங்கள் குறித்த அறிக்கைகள் கிடைக்காததன் காரணமாகவே விசாரணைகளை கல்கிஸ்ஸை மஜிஸ்திரேட் நீதவான் ஒத்திப்போட்டார்.

வழக்கு விசாரணை நேற்று நடைபெற்ற பொழுதே 26ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

## பெல்ஜியம் தாக்குதலின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தாக்குதல்களையடுத்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று உலகநாடுள் அனைத்திலும் உள்ள விமானநிலையங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானங்களுக்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் விமான நிலையத்துக்கு எடுக்கப்பட்டிருந்த தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் பொலிஸ் மற்றும் புலனாய்வு பிரிவினர் எச்சரிக்கையாக இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் அனைத்துப் பயணப் பொதிகளும் பல இடங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் பயணிகள் தொடர்பில் தாம் மனம் வருந்துவதாகவும் சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை கூறியது.

இதேவேளை,விமானப்படை, இராணுவம், சிவில் பாதுகாப்பு பிரிவு உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள் அதிகளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## அஞ்சல் பரிவர்த்தனை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளார்.

இவ்வறிக்கையை தமக்கு உடன் சமர்ப்பிக்குமாறு மத்திய தபால் பரிவர்த்தனை நிலைய அத்தியட்சகரிடம் அமைச்சர் கோரியுள்ளார்.

தபாலினூடாக இந்த போதைக் குளிசைகள் பகிரப்பட்டது தொடர்பாக மத்திய தபால் பரிவர்த்தனை அதிகாரிகள் சிலர் தொடர்புபட்டிருப்பது குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இரகசியப் பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

இந்த மோசடி வியாபாரத்துடன் தொடர்புபட்ட பாகிஸ்தானியரான செய்யத் முஹம்மத் இல்பான் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். மேலதிக நீதவான் சந்தன கலங்சூரிய முன் இவர் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்த பாரிய மட்ட போதை குளிசை தொடர்பாக இஸ்லாமாபாத் சர்வதேச பொலிஸ் பிரிவு மற்றும் பிரித்தானிய சர்வதேச பொலிஸ் பிரிவு இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இரகசிய பொலிஸின் பண மோசடிப் பிரிவின் பொறுப்பாளருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்தே இரகசியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கொழும்பு கடுகதி தபால் பிரிவுக்கு பாகிஸ்தானின் கராச்சியிலிருந்து போதை மாத்திரை பார்சல் ஒன்று வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது. அதன்படி கடந்த 17ம் திகதி மாத்திரைப்பார்சல் இலங்கைகு வந்துள்ளது. அது பற்றி எவ்வித தகவல்களும் பதிவில் இல்லை. 18ஆம் திகதி இவ்வாறு வந்த 17 பார்சல்களும் விநியோகிக்கப்பட்டதாக ஆவணங்களில் பதியப்பட்டுள்ளது.

இந்த பார்சல் தபால் விநியோகமாக புறக்கோட்டையில் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த பார்சல் வெள்ளவத்தை தயா வீதியிலுள்ள 9ம் இலக்க இல்லத்திருப்பவருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இங்கு வசிக்கும் பாகிஸ்தானிய வர்த்தகர் ஒருவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது, சந்தேக நபரிடம் அபாயகரமான போதை மாத்திரைகளடங்கிய 12 கிலோ கொண்ட 9 பார்களும் இரு கிலோ கொண்ட இரு பார்சல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை பிரித்தானியாவுக்கு அனுப்புவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பாகிஸ்தானியரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கு நீதவான் உத்தரவிட்டார்.

இதேநேரம், இதனுடன் தொடர்புடைய சகலரையும் கைது செய்ய இரகசியப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தகவலறியும் சட்டமூலத்துக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி, அனைத்து மாகாண சபைகளும் அங்கிகரித்துள்ளமையால் இன்றையதினம் தகவல் அறியும் சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வசீம் மரண விசாரணைக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றத்துக்கு ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் உத்தரவிட்டு இந்த மாதம் 25ஆம் திகதியுடன் ஒரு மாதமாகவுள்ளது. எனினும், இரகசியப் பொலிஸார் இதுவரை அது தொடர்பாக எந்த ஒரு சந்தேக நபரையும் கைது செய்யவில்லை.இதனையடுத்து குறித்த வழக்கு நேற்று (23) விசாரணைக்கு வந்தபோது, அரசதரப்பு சட்டத்தரணி டிலான் ரத்னாயக்க, இந்த விசாரணை நடவடிக்கைகளை இறுதி செய்வதற்காக மேலும் இரண்டு மாத கால அவகாசம் வழங்குமாறு நீதிமன்றைக் கோரியிருந்தார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சி.சி.ரீவி கெமராக் காட்சிகள் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுகின்ற போதும், அந்தப் பரிசோதனை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றங்கள் கிடைக்கவில்லை என்று அரச தரப்பு சட்டத்தரணி கூறினார்.

நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுத்த மேலதிக நீதவான், குறித்த வழக்கை மே மாதம் 12ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, அன்றைய தினம் இந்தப் பரிசோதனைகளின் முன்னேற்றங்களை வெளிக்காட்டும் அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்பிக்குமாறும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டார்.

## மின்சக்தி அமைச்சர் பேசும்போது...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வர்த்தக நிறுவனங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாம் இப்பதவியை ஏற்றுள்ள இந்த 6 மாதங்களுக்குள் நாட்டில் 3 இலட்சம் பேருக்கு அதிகமாக, ஆரம்பக்கட்டணம் இன்றி சலுகை அடிப்படையில் மின்சாரம் வழங்கியுள்ளோம்.

இதற்கிணங்க ஏப்ரல் மாதத்துக்குள் நாட்டிலுள்ள அனைவருக்கும் மின்சாரத்தை வழங்கவே நாம் எதிர்பார்த்துள்ளோம் என்று உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இதன்போதே எழுந்து நின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மஹிந்த ஆதரவு உறுப்பினரான சிசிர ஜயகொடி, டோச் லைட்டை அடித்து, நாட்டு மக்களுக்கு நீங்கள் இதனை வழங்கினாலும் அவசரத்தத்துக்கு நன்றாக இருக்கும் என்று கிண்டலாக கருத்தொன்றை கூறினார்.

இவரது மேற்படி கருத்தை கேட்டு கோபத்துடன் எழுந்த மின்சக்தி மற்றும் எரிசக்தி பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா, சபாநாயகரால் பெயர் குறிப்பிடப்படாமல் இந்த உறுப்பினரின் மைக் எவ்வாறு இயங்கியது?

இன்று மட்டும் பாராளுமன்றில் இது மூன்றாவது தடவையாக இடம்பெறுகின்றது. ஆகவே, மைக் செயற்படுத்தினர் குறித்து ஆராயவேண்டும் என்று கூறி சபையை விட்டு எழுந்து சென்றார்.

இச்சம்பவத்தின் போது இருந்த எதிரணி பின் வரிசை உறுப்பினர்கள் பலமாக சிரித்ததைத் தொடர்ந்து, சபாநாயகர் அவர்களை எச்சரித்தார். பின்னர், அமைதியாக நின்றுகொண்டிருந்த அமைச்சர் ரஞ்சித் தனது உரையைத் தொடர்ந்தார்.

## அ.இ.ம.கா. வழக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் மே 03ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பேராளர் மாநாடு கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி அக்கட்சியின் தலைவரான அமைச்சர் றிஷாத் பதியுதீன் தலைமையில் குருநாகலில் நடைபெற்றது. இம்மாநாட்டில் கட்சிக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதன் போது புதிய செயலாளராக சுபைதீன் ஹாஜியார் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த மாநாடு கட்சியின் யாப்பு விதிகளுக்கு முரணாக கூட்டப்பட்டது எனவும் அதனால் புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம் செல்லுபடியற்றது எனவும் உத்தரவிடக்கோரி அதன் முன்னாள் செயலாளர் நாயகமான வை.எல்.எஸ். ஹமீட் கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிபதி அதனை எதிர்வரும் மே மாதம் 03ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக கட்சியின் தலைவர் றிஷாத் பதியுதீன், புதிய செயலாளர் சுபைதீன் ஹாஜியார் உட்பட 15 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நேற்று விசாரணையின்போது அக்கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரான ராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தவிர ஏனைய 14 பிரதிவாதிகளும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

## இடைநிறுத்தம் கடிதம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராததற்காகவே தான் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக மௌலவி கலீல் தெரிவித்தார்.

கட்சியிலிருந்து தான் நீக்கப்பட்டதற்குக் காரணம் கட்சிக்கு எதிராக சதி செய்தது என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. இப்போது அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளேன்.

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட மூன்று கூட்டங்களில் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதென எழுத்துமூலம் அறிவித்தேன். அவ்வாறிருக்கவே தான் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஒருசில தினங்களில் உம்றாவுக்காக மக்கா செல்லவுள்ளேன். மக்கா சென்று திரும்பியதும் இடைநிறுத்தம் தொடர்பாக எடுக்கும் அடுத்த நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ஆணைக்குழு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ் ஷெய்க் எம்.ஐ.எம். றிஸ்வி முப்தி மற்றும் பிரதிநிதிகள் மக்கள் கருத்தறியும் குழுவை சந்திக்க இருப்பதாகவும், இதன் போது ஏற்கனவே ஜம்இய்யதுல் உலமா தயாரித்துவருகின்ற புதிய அரசியலமைப்புக்கான ஆலோசனைகளை முன்வைப்பதா இல்லையா என்பது தொடர்பாக இறுதி முடிவு இதுவரையிலும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், நேற்று மாலை மத்திய மற்றும் வட மத்திய மாகாண முதல்வர்களை சந்தித்து புதிய அரசியலமைப்பு தொடர்பாக கலந்துரையாடியதாகவும் தொடர்ந்தும் அனைத்து மாகாண முதலமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாட இருப்பதாகவும் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரையும் லால் விஜேநாயக்க தலைமையிலான குழுவினர் சந்தித்து தமது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். இதன் போது பிரதமர் ஆணைக்குழுவின் பணிகள் நிறைவுபெற்றிருக்காத காரணத்தினால் பணிகளைத் தொடர மேலும் ஒருமாத கால அவகாசம் வழங்கினார்.

## 2018, 2019களில் மீண்டும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மதிப்பீடல் ஒன்றை செய்யவேண்டியுள்ளது என்றும் நாட்டை இருளில் போடவேண்டிய தேவை எமக்கில்லை என்றும் அவர் கூறினார்.

## இலங்கை - இந்திய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது இலங்கை இந்தியா பாலம் தொடர்பில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரான சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் கம்பன்பில கேள்விகளை எழுப்பினார்.

ஆனால் இக்கேள்விகளுக்கான பதில்களை பிரதமர் தெரிவிப்பார் என லக்ஷ்மன் கூறியதை அடுத்து எழுந்து நின்ற பிரதமர் ரணில் மேற்படி கம்பன்பில எம்.பியின் கேள்விகளுக்கு நகைச்சுவையாக பதிலளித்தார்.

அதாவது இந்திய நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி மேற்படி பாலம் தொடர்பில் 2015.12.16ஆம் திகதியன்று லோக்சபாவில் அறிவித்தமை குறித்து அறிவாரா? என்ற கேள்விக்கு

நிதின் கட்காரி பாராளுமன்றில் ஹிந்தி மொழியிலேயே உரையாற்றினார். அவர் எது குறித்து உரையாடினார் என்பது குறித்து அறிந்து கொள்ள வேண்டும்மெனில் ஹிந்தி மொழி தெரிந்திருக்க வேண்டும் எனக்கோ அந்த மொழி தெரியாது.

உங்களுக்கு அம்மொழி தெரிந்தால் எனக்கும் அந்த உரையில் என்று குறிப்பிட்டார் என்பது எனக்கும் கூறுங்கள் என்று கிண்டலாக பதிலளித்தார்.

இதற்கு அவர் ஆற்றிய உரை ஆங்கில மொழியில் இந்திய ஊடகங்களில் வெளிவந்தன. எனது பேட்டியிலும் அது உள்ளது. உங்களுக்கு வேண்டுமென்றால் நான் மெயிலில் அனுப்புகிறேன் என்று சற்று காண்டமாக கம்பன்பில பிரதமருக்கு தெரிவித்தார்.

இக்கருத்துக்கு பதிலடி கொடுத்த பிரதமர் பத்திரிகைகளில் வெளிவந்ததை எவ்வாறு நம்புவது? அப்படியானால் எல்லா பத்திரிகைகளையும் நாம் ஆராய வேண்டும். இந்திய அமைச்சரின் பாலம் தொடர்பான கூற்று லோக் சபை ஹன்சாட்டில் பதியப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும். என்றார்.

பிரதமரின் மேற்படி பதிலைத்தொடர்ந்து மீண்டும் இடைவினா ஒன்றை எழுப்பிய கம்பன்பில எம்.பி,

பாலம் தொடர்பில் இந்திய அமைச்சர் பொய்யான உரையொன்று ஆற்றியிருந்தால் நீங்கள் இந்தியாவிலிருக்கும் இலங்கைத் தூதரகம் மூலம் அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கலாம் தானே? - என்றார்.

இக்கேள்விக்கு சிரித்துக்கொண்டே பதிலளித்த பிரதமர் இந்தியாவில் மலையாளம், ஹிந்தி, கன்னடம், தெலுங்கு என பல மொழிகள் உள்ளன. இந்த மொழிகள் தெரிந்தவர்களையே தூதரகங்களுக்கு வேலைக்கு அமர்த்த வேண்டும் என்றும் கடந்த அரசோ அப்படி வழங்கவில்லை.

எமது வெளிவிவகார அமைச்சர் மூலமே இக்குறை தற்போது கொஞ்சம் கொஞ்சமாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. ஆனால் கூட்டு எதிரணியினரான உங்களுக்கு மலையாள மாந்திரீகம் நன்றாக தெரியும் என்பதை மட்டும் நான் நன்கு அறிவேன் என கம்பன்பிலவைப் பார்த்து நக்கலடித்தார்.

இக்கருத்தைக்கேட்டு கோபமடைந்த மேற்படி எம்.பி பிரதமர் சபையில் நன்றாக நகைச்சுவை அடிக்கிறார் வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கோட்டை பாக்குக்கு வழி சொல்வது போல் தான் அவரது விடைகள் காணப்பட்டன என்று கோபத்துடன் கூறினார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



## உபாதை காரணமாக டுமினி விலகல்

உலகக்கிண்ண 20க்கு 20 தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியுடனான போட்டியில் தென்னாபிரிக்க சகலதுறை வீரர் டுமினி விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆப்கானிஸ்தான் அணியுடனான உலகக்கிண்ணப் போட்டியில் டுமினியின் இடது தொடையில் காயம் ஏற்பட்டது. இந்நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாக்பூரில் நடைபெறவுள்ள போட்டியில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை டெல்லியில் நடைபெறவுள்ள இலங்கை அணியுடனான இறுதி லீக் போட்டியில் டுமினி விளையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் எதிரொலி;

## யூரோ கிண்ண கால்பந்து நடைபெறுவதில் சிக்கல்?

பெல்ஜியமின் தலைநகர் ப்ரஸல்ஸில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 34 பேர் பலியானதுடன், கிட்டத்தட்ட 170 பேருக்கு மேல் காயங்களுக்கு உள்ளாகினர். விமான மற்றும் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட சகல பொதுச்சேவைகளும் ஸ்தம்பிதமடைந்தன.

இதேவேளை, எதிர்வரும் ஜுன் மாதம் 10ஆம் திகதியிலிருந்து ஜுலை 10ஆம் திகதி வரை பிரான்ஸில் நடைபெறவுள்ள யூரோ கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு, கடந்த வருடம் நவம்பர் மாதம் இதே மாதிரியான தாக்குதலை பிரான்ஸில் நடத்தியதுடன், இதில் 130ற்கும் அதிகமானோர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் பிரான்ஸின் உள்துறை பாதுகாப்பு அமைச்சர் இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கையில், இம்முறை யூரோ கிண்ணத்திற்கு பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என தெரிவித்தார்.

## ஹெட்ரிக் வெற்றியுடன் அரையிறுதியில் நியூசிலாந்து

20க்கு 20 உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தானை வீழ்த்திய நியூஸிலாந்து வெற்றி பெற்றது. நியூஸிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி நேற்றுமுன்தினம் இரவு மொஹாலியில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடுவதை தீர்மானித்தது.

இதையடுத்து மார்டின் கப்டிலும், அணித் தலைவர் வில்லியம்ஸனும் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினார்கள்.

கப்டில் அதிரடி காட்ட வில்லியம்ஸன் நிதானமாக விளையாடினார். கப்டில் அதிரடியால் நியூஸிலாந்து 6 ஓவர் முடிவில் 58 ஓட்டங்களை குவித்தது. இந்நிலையில் வில்லியம்ஸன் 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய முன்றோ, ஆண்டர்சன், ரொங்கி ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இந்நிலையில் 40 பந்துகளில் 80 ஓட்டங்களை எடுத்த நிலையில் கப்டிலும் ஆட்டமிழந்தார். இதனால் நியூஸிலாந்து அணி அதிக ஓட்டங்களை குவிக்க முடியாமல் திணறியது. ஆனால் கடைசி ஓவர்களில் ரொஸ் டெய்லர் அதிரடியாக விளையாடி நியூஸிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்களைக் குவித்தது. பாகிஸ்தான் தரப்பில் மொஹமட் சமி மற்றும் அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஷர்ஜீல் கான் மற்றும் அகமட் செஷாத் களமிறங்கினர். இருவரும் பொறுப்புடன் விளையாடி அணிக்கு நல்ல தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். இந்நிலையில் 47 ஓட்டங்களைப் பெற்று ஷர்ஜீல் கான் ஆட்டமிழந்தார். அப்போது பாகிஸ்தான் 5.3 ஓவர்களில் 65 ஓட்டங்களை எடுத்திருந்தது. சிறிது நேரத்தில் செஷாத்தும் 30 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

எனினும் பின்னால் வந்த வீரர்கள் சொதப்பியதால் அந்த அணி தடுமாறத் தொடங்கியது. உமர் அக்மல் 24 ஓட்டங்களுடனும், அப்ரிடி 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இறுதியில் 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு பாகிஸ்தான் அணி 158 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதனால் நியூசிலாந்து அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிக்கும் தகுதி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக மார்டின் கப்டில் தெரிவானார். இதேவேளை, இப்பிரிவிலிருந்து அரையிறுதிக்குத் தெரிவாகும் அடுத்த அணி எது என்பதை அனைத்து லீக் போட்டிகளும் முடிவடையும் வரை தீர்மானிக்க முடியாமல் உள்ளது. இதில் பாகிஸ்தான் அல்லது அவுஸ்திரேலிய அணிகள் அவ்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றதுடன், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா மோதும் போட்டி அடுத்த அணியைத் தீர்மானிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வதந்திகளை மறுத்தார் மஹேல!

இலங்கை அணியின் நட்சத்திர வீரரும், முன்னாள் தலைவருமான மஹேல ஜயவர்தன தற்போது தான் ஆற்றிவருகின்ற பணி குறித்து டுவிட்டர் சமூகவலைத்தளம் வாயிலாக விளக்கம் அளித்துள்ளார். இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் நடைபெற்றுவரும் 20க்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகிறது. சமீபகாலமாக இலங்கை அணி சந்தித்த தொடர் தோல்வியால் அரவிந்த டி சில்வா தலைமையில் புதிய தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது. இதில் உறுப்பினராக முன்னாள் வீரர் குமார் சங்கக்காரவும் இடம்பெற்றுள்ளார்.

அதேபோல் மஹேலவும் இம்முறை 20க்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் சிறப்பான செயல்பாட்டுக்கு உதவி வருவதாக தகவல்கள் வெளிவந்தன. அத்துடன் இலங்கை அணியுடன் இணைந்துகொள்ளப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மஹேல தனது டுவிட்டரில் கருத்து வெளியிடுகையில், இந்த தகவல் எங்கிருந்து வந்தது. நான் கிரிக்கெட் வர்ணனையில் மட்டுமே தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். இலங்கை அணியுடன் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

## கிரிக்கெட்டிலிருந்து அப்ரிடி ஓய்வு!

உலகக் கிண்ண 20க்கு 20 போட்டித் தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியே தனது இறுதி சர்வதேசப் போட்டி என பாகிஸ்தான் அணித்தலைவர் சஹித் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக்கிண்ண 20க்கு 20 போட்டியில் 22 ஓட்டங்களால் பாகிஸ்தான் தோல்வியடைந்தது. இவ்வாறு உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானின் தொடர் தோல்விகளால் மனம்தளர்ந்த அப்ரிடி போட்டியின் பின்னரான செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தனது ஓய்வை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியே எனது இறுதிப் போட்டியாக அமையலாம். நடுத்தர ஓவர்களில் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர். முதல் ஆறு ஓவர்களுக்கு நாம் சிறப்பாகச் செயற்பட்டோம். பின்னர் அதனை செய்யவில்லை. தவறுகளை மீண்டும் செய்துள்ளோம். ஒவ்வொரு போட்டியிலும் தவறுகள் செய்கிறோம். தோல்வியை மறந்து அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியை கவனத்தில் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் தற்போது நடைபெற்றுவருகின்ற 20க்கு 20 உலகக்கிண்ணப் போட்டிகளுடன் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் 20க்கு 20 அணியின் தலைவர் பதவியில் இருந்து சஹீட் அப்ரிடி நீக்கப்படலாம் என்ற செய்தியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தினார்.



## சர்வதேச விளையாட்டு தின தேசிய நிகழ்வு கல்முனையில்





சர்வதேச விளையாட்டு தினம் எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதி சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இலங்கையின் தேசிய நிகழ்வினை கல்முனையில் நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகளுடனான உயர்மட்ட மாநாடு அம்பாறை மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துசித பீ.வணிகசிங்க, விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் சமன் பண்டார, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.பீ.விஜயரட்ன, கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.மதிவாணன் உள்ளிட்ட விளையாட்டுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், இளைஞர் சேவை மன்றத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சர்வேதேச விளையாட்டு தின தேசிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ள கல்முனை பிரதேச இடங்களான ரெஸ்ட் ஹவுஸ் கடற்கரை, சந்தாங்கேணி மைதானம் என்பவற்றை பிரதி அமைச்சர் ஹரீஸ் தலைமையிலான விளையாட்டுத்துறை அமைச்சின் குழுவினர் பார்வையிட்டனர்.

## தஸ்கீனின் மேன்முறையீட்டை ஐ.சி.சி நிராகரிப்பு

பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அஹமட், சுழல்பந்து வீச்சாளர் அரபாத் சன்னி ஆகிய இருவரும் விதிமுறைகளுக்கு மாறாக பந்து வீசுவதாக நிரூப்பிக்கப்பட்டதை அடுத்து சர்வதேச போட்டியில் அவர்கள் பந்துவீச ஐ.சி.சி. தடை விதித்திருந்தது. இதையடுத்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தஸ்கின் அஹமடின் தடைக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் பேரவையில் மேன்முறையீடு செய்தது. ஐ.சி.சியின் பந்துவீச்சுத் தடைக்கான விசேட குழு தஸ்கினின் மேன்முறையீடு தொடர்பான அறிக்கையை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டதுடன், அவருக்கு மீண்டும் பந்துவீச்சு பரிசோதனை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மேன்முறையீட்டை ஐ.சி.சி நிராகரித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் பங்களாதேஷ் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் நடுவராக பணியாற்றிய ஆண்டி பைக்ரோவ்ட் ஐ.சி.சி.-க்கு அனுப்பியுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில், தஸ்கின் அஹமட், அரபாத் சன்னி பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்தார். இதனை அடுத்து இருவரையும் சென்னையில் உள்ள தனியார் ஆய்வகத்தில் பந்துவீச வைத்து பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் தஸ்கின் அஹமடும், அரபாத் சன்னியும் ஐ.சி.சி. விதி முறைகளுக்கு மாறாக முறையற்ற வகையில் பந்துவீசுவது உறுதி செய்யப்பட்டது. இதனை அடுத்து குறித்த இருவரும் சர்வதேச போட்டிகளில் பந்து வீசுவதற்கு ஐ.சி.சி. தடை விதித்திருந்தது.

## சட்டசபைத் தேர்தலில் களமிறங்கும் ஸ்ரீசாந்த்

இந்தியாவின் கேரள சட்டசபைத் தேர்தலில் பாரதிய ஜனதாக கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ளதாக இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் சாந்தகுமரன் ஸ்ரீசாந்த் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள கேரள சட்டசபைத் தேர்தலுக்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் 140 உறுப்பினர்கள் போட்டியிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கான பரிந்துரையை இன்று அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள ஸ்ரீசாந்த் எர்ணாக்குளம் அல்லது திரிப்புனித்துறா தொகுதியில் போட்டியிடுவதற்கான அனுமதி கிடைக்கும் எனவும் திரிப்புனித்துறா தொகுதியில் போட்டியிடவே தான் விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார். கடந்த 2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல் போட்டியில் இடம்பெற்ற சூதாட்ட குற்றச்சாட்டில் ஸ்ரீசாந்திற்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஸ்ரீசாந்த், டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டு கடந்த 2015 ஆம் ஜுலை மாதமே விடுவிக்கப்பட்டார்.

இந்திய அணிக்காக 27 டெஸ்ட் போட்டிகள், 53 ஒருநாள் போட்டிகள் மற்றும் 20க்கு 20 போட்டிகளில் விளையாடியுள்ள ஸ்ரீசாந்த், 2007 உலகக்கிண்ண 20க்கு 20 மற்றும் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக்கிண்ண இந்திய அணியிலும் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## றியோ ஒலிம்பிக்குடன் உசைன் போல்ட் ஓய்வு

பிரேசிலின் றியோ டி ஜெனிரோவில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுடன் மெய்வல்லுனர் அரங்கிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக உலகின் அதிவேக மின்னல் வீரர் உசைன் போல்ட் அறிவித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் ஆறு தடவைகள் தங்கம் வென்ற உசைன் போல்ட் அவரது பயிற்சியாளர் கிளேன் மில்ஸின் ஆலோசனைக்கு அமைய எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் வரை விளையாடுவதாக முன்னர் தெரிவித்திருந்தார். அப்போட்டிகளுடன் ஓய்வை அறிவிப்பேன் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் தற்போது ஒரு சில காரணங்களுக்காக றியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டியுடன் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து உசைன் போல்ட் கருத்து தெரிவிக்கையில், இது என்னுடைய இறுதி ஒலிம்பிக் போட்டியாக அமையும். இன்னும் நான்கு வருடங்கள் விளையாடுவது கடினமானது. றியோ ஒலிம்பிக்கில் வெற்றியுடன் விடைபெற வேண்டும். என தெரிவித்துள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4x100 மீற்றர் போட்டிகள் என மூன்று தங்கப் பதக்கத்தை வென்றிருந்த உசைன் போல்ட், மீண்டும் மூன்று தங்கப் பதக்கங்கள் வெல்ல வேண்டும் என்பதே தனது இலக்கு மற்றும் கனவு என தெரிவித்துள்ளார். அத்துடன் 200 மீற்றர் தூரத்தை 19 விநாடிகளுக்கும் குறைவான நேரத்தில் ஓடி முடிக்க வேண்டும். அந்த இலக்கை அடைவதை எதிர்பார்த்துள்ளேன் என்றார். இதனை இந்த ஆண்டில் நிறைவேற்றிக் கொள்ள விரும்புவதாகவும் உசைன் போல்ட் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 24th March 2016